
# The Bible Standard

## (தமிழ் வெளியீடு)



“உமது வெளிச்சத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்.
அவைகள் என்னை நடத்தும்.” சங். 43:3

**“LIFT UP A STANDARD FOR THE PEOPLE”**
**Isaiah 62 : 10**

**Translated from BS 877, 878**

பொருளடக்கம்


**ஒரு மாபெரும் மனிதர் மரிக்கும் வேளையில் அளித்த செய்தி** ........................................... 2

**யாக்கோபின் இக்கட்டுக் காலம்** ..................... 11

**அறிவிப்பு** .................................................... 16



**BS Tamil Version - 23**

**2014**


# ஒரு மாபெரும் மனிதர் மரிக்கும் வேளையில் அளித்த செய்தி

**(உபா. 6 : 1-15)**

"*கர்த்தரை மறவாதபடிக்கு எச்சரிக்கையாயிரு*" உபா. 6 : 12.

உபாகமம் என்பது வேதாகமத்திலுள்ள முக்கியமான புத்தகங்களில் ஒன்றின் தலைப்பு ஆகும். அதிலிருந்து தாவீதும், பழைய ஏற்பாட்டின் மற்ற தீர்க்கதரிசிகளும் தேவ ஆவியால் ஏவப்பட்டு குறிப்பிடத்தக்க அளவில் எடுத்து பயன்படுத்தியுள்ளனர் என்பது தெளிவாகிறது, அதில் இருந்து, நம்முடைய கர்த்தரும், அப்போஸ்தலர்களும் தாராளமாக எடுத்துக் காட்டியிருக்கின்றனர். இது தேவனுடைய நியாயப்பிரமாணம் முழுவதற்குமுரிய மகத்தான தொகுப்பு எனவும் கூறலாம். தேவனுடைய அந்த மாமனிதரும் இஸ்ரவேலின் தலைவருமானவரின் எண்ணற்ற விளக்க உரைகளை இந்த புஸ்தகம் நமக்கு முன்வைக்கின்றது; அவரே நியாயப்பிரமாணத்தின் மத்தியஸ்தராவார். மோசேயைப் பொறுத்தமட்டில், இதன் தயாரிப்பு படிப்படியான ஒரு வேலையாக இருந்திருக்கக்கூடும், ஆனால் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு அதனை எடுத்துரைக்க அவருடைய மரணத்துக்கு சற்று முன்பு வரை அது பிரத்தியேகமாக ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தது என்பது தெளிவாகத் தெரிகிறது. அது, வாக்களிக்கப்பட்ட தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும்படியாக யோசுவாவின் தலைமையின் கீழ் இஸ்ரவேல் ஜனத்தார் யோர்தானைக் கடந்து செல்லத் தயாராயிருந்த காலமாகும். அதன் மொழிநடையின் பேரழகும், இலக்கிய நடையும், எல்லோராலும் தாராளமாக ஒத்துக் கொள்ளப்படுகிறது, சிலர், அதின் சொற்பொழிவுகள் பண்டையக்கால டெமொஸ்தெனிசின் சொற்பொழிவைப் போலவும், பர்க்கியைப் போலவும் அதிக நவீனமானதாகவும் இருந்ததாக மதிப்பிட்டிருக்கிறார்கள். புத்தகத்தின் தெளிவான நோக்கம், இஸ்ரவேலர் மீது, அவர்களுடைய கடந்த காலத்தின் மகிமையான பாடங்களை பதியச் செய்வதாக இருந்தது; அப்படி இருப்பதற்கு மோசேயின் தொனியும், மோசே மூலமாக கொடுக்கப்பட்ட கர்த்தருடைய தொனியும் அவர்களையும், அவர்கள் மூலமாக அவர்களுடைய வருங்கால சந்ததியையும் உற்சாகப் படுத்தி, கண்டித்து, புத்திமதி கூறுவதாக இருந்தது.

மோசே கர்த்தருக்கு உத்தமமாயிருந்ததை மிகவும் கவனமாக கவனித்துக் கொள்ள வேண்டும். இக்கால நவீன போதகர்கள் தங்கள் சபையார் சம்பந்தமாகக் கூறுவதை நாம் அடிக்கடி கேள்விப்படுவது போல, அவர் இஸ்ரவேலை "தன்னுடைய ஜனமாகக்" கூறி பெருமைப் பட்டுக் கொள்ளவில்லை. ஆயினும் அப்படி அவர் அவ்விதம் கூறியிருந்தாலும்கூட உண்மையில் மோசே மன்னிக்கப்படத்தக்கவர். ஏனெனில் அவர் தனிப்பட்ட முறையில் மத்தியஸ்தராக, சீனாய் மலையில் கர்த்தருடன் செய்து கொண்ட உடன்படிக்கையின்படி தேசம் முழுவதற்கும் அவர் பிரதிநிதியாக இருந்தார். ஒரு தலைவர் என்ற முறையில் அவருடைய மகத்தான வேலையானது ஒப்பிட்டுப்பார்க்கப்படும்போது கவனிக்கப்படாமலே கடந்து போய்விட்டதையும், மேலும் இஸ்ரவேல் ஜனங்களுக்கு அவருடைய அறிவுரைகள் அனைத்தும் மேலான கருத்துக்கள் நிறைந்ததாகவும், தேவனிடத்தில் கடமை மற்றும் பொறுப்பை ஏற்படுத்துவதுடன், எல்லா ஆறுதல்கள் மற்றும் கடந்த கால ஆசீர்வாதங்களுக்காகவும், அதைப் போலவே, எதிர்காலத்தைக் குறித்து அவர்கள் மனதில் வளர்த்து வந்திருந்த எல்லா நம்பிக்கைகளுக்கும் ஏற்ப இருக்கின்றன என்பதையும் நன்கு கவனித்துப் பாருங்கள். இஸ்ரயேலருக்கான இந்த சொற்பொழிவு தயாரிக்கப்பட்டு, கொடுக்கப்பட்ட விவரம் நமக்கு, அப்போஸ்தலன் பேதுரு, தன்னுடைய நிரூபத்தில் இது தொடர்பாக, கூறியுள்ளதை நினைவுபடுத்துகிறது. அதாவது "**இதினிமித்தம், இவைகளை நீங்கள் அறிந்தும், நீங்கள் இப்பொழுது அறிந்திருக்கிற** (நிகழ்காலம்) **சத்தியத்தில் உறுதிப்பட்டிருந்தும் உங்களுக்கு**




**COURTESY BY :**

THE BIBLE STANDARD -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor**, Ralph M. Herzig. Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates**: **One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** *www.biblestandard.com*

**இவைகளை எப்பொழுதும் நினைப்பூட்ட நான் அசதியாயிரேன்**" (2 பேது. 1 : 12) என்று கூறியுள்ளதை நினைவுப்படுத்து கிறது. உபாகமத்தில் உள்ள இந்த விளக்கவுரை, இஸ்ரயேலர்கள் தங்களுடைய பழைய தலைவருடைய வழிநடத்துதலிலிருந்து இளவயதுள்ள ஒருவருடையதும் ஒரு புதிய தேசத்திற்குள்ளாகவும் கடந்து செல்லுகிறதான முக்கியமான இடத்தில் அவர்களிடம் மதிப்புமிக்க ஒரு செல்வாக்கு பெற்றிருந்தது; அதுமட்டுமல்லாமல், அறுநூறு வருடங்களுக்குப் பிறகு, தேசம் விக்கிரக ஆராதனைக் குள்ளாக விழுந்துபோயிருந்தபோது, சாலொமோனுடைய தேவாலயம் உண்மையில் கைவிடப்பட்டு, ஜனங்களுடைய மத சம்பந்தமான தொழுதுகொள்ளுதல் மிகவும் கீழான நிலையில் பின்னடைந்திருந்த சமயத்தில், உபாகமம் எனும் இந்த புத்தகமானது தேவாலயத்தின் கட்டட இடிபாடுகளின் குப்பை கூளத்திலிருந்து கண்டெடுக்கப்பட்டு, யோசியா ராஜாவின் செவிகள் கேட்க முதலாவது வாசிக்கப்பட்டு, அதன்பின்பு அவருடைய ஆணையின்படி, எல்லா ஜனங்களும் கேட்கும்படி வாசிக்கப்பட்டது. அந்த தேசத்தின் வரலாற்றில் ஏற்பட்ட மிகப்பெரிய எழுப்புதல் களில் ஒன்றை ஏற்படுத்தியது. அது தேசம் முழுவதுமாக விக்கிரகங்களை அழிப்பதற்கும், தெய்வீக ஆராதனையை மீண்டும் ஸ்தாபிப்பதற்கும் வழிநடத்தியது. (2 ராஜா. 22 : 8-20) என்று வேதாகம சரித்திரம் நமக்கு கூறுகிறது.

## கர்த்தரைப் பற்றிய சரியான பயம்

நம்முடைய இன்றைய பாடம் பொதுவாக இரண்டாம் சொற்பொழிவைச் சேர்ந்ததாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. (உபா. 5 : 1). "உடன்படிக்கையின் புஸ்தகம்" என்றும் இந்த சொற்பொழிவின் முடிவில், உபா. 12 : 26-ல் அடங்கியுள்ள நியாயப்பிரமாணம் மீண்டும் ஒப்புவிக்கப்படுகிறது அல்லது வாசிக்கப்படுகிறது என்று சிலர் அனுமானிக்கின்றனர். அதன்பின்பு, அந்த புத்தகம் உபா. 31 : 24-29-ல் விவரிக்கப்பட்டுள்ளபடி மகா பரிசுத்த ஸ்தலத்தில் சாட்சிப் பெட்டிக்குள்ளே வைக்கப் பட்டது.

வாக்களிக்கப்பட்ட தேசத்தில் போதிக்கப்பட வேண்டியும் நிறைவேற்றப்பட வேண்டியும் கர்த்தர் ஆணையிட்டிருந்த தெய்வீக கற்பனைகளும், கட்டளை களும், நியாயங்களும் அடங்கிய தொகுப்பாக இப்புஸ்தகம் இருக்கிறது என்ற வாக்கியத்துடன் இந்த பாடம் ஆரம்ப மாகிறது. "நியாயங்கள்" என்ற வார்த்தை இங்கு, வேத வாக்கியங்களில் பிற இடங்களில் வருவதைப் போலவே, சரியான மற்றும் தவறான முடிவுகளைக் குறித்துக் காட்டு கிறது. இவற்றின் நோக்கம் (உபா. 6 : 2) "**நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து அவருடைய பிரமாணங்களையெல்லாம் கைக்கொள்வாயாக**" என்று வசனத்தில் சொல்லப் பட்டுள்ளது. தேசத்தில் பிரவேசித்தவர்களுக்கு மட்டும் இது பொருந்துவதாக இல்லாமல் அவர்கள் எல்லோருடைய பிள்ளைகளுக்கும் நீட்டிப்பதற்காகவும், தேசத்தில் அவர்




களுக்கு அனுகூலத்தையும், அதில் அவர்கள் தொடர்ந்து இருப்பது அவற்றை சார்ந்திருப்பதாகவும் செய்யப்பட்டது. பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும் என்று அப்போஸ்தலர் நமக்கு ஆலோசனை சொல்கிறார். ஆனால், "**கர்த்தருக்கு பயப்படுதலே** (பயபக்தியாயிருத்தலே) **ஞானத்தின் ஆரம்பம்**" என்று வேத வாக்கியங்கள் நமக்கு காண்பிக்கிறது. இந்த இரண்டு வாக்கியங்களுக்கும் முரண்பாடு இல்லை, ஏனெனில் ஒரு சரியான பயபக்தி என்பது, தான் நேசிக்கிற, பயபக்திக்குரிய ஒருவரை வெறுக்கவோ அல்லது அவமதிப்பு செய்யவோ கூடாது என்ற ஒரு பயத்தை தன்னுடன் தாங்கியதாயிருக்கிறது. மேலும் எல்லா பயத்தையும் முழுவதுமாக புறம்பே தள்ளுவது பூரணமான அன்பாக மட்டுமே இருக்கிறது, அன்பு பூரணப்படுதல் என்பது படிப்படியாக நடக்கக்கூடிய ஒரு விஷயமாயிருக்கிறது. அன்பின் ஆரம்பமானது ஒத்துப்போக முடியாததல்ல, ஆனால் சர்வ வல்லவருடன் கூடிய தொடர்பில் பயபக்தியின் ஆவியுடன் முழு இசைவுள்ளதாகவும், அவருடைய மகத்துவம் மற்றும் பூரணத்தையும் பொறுத்தமட்டில் பயபக்தியுடன் கூடிய பயம் உணர்வு கொண்டதாகவும் நம்முடைய சிறுமை மற்றும் அபூரணத்துக்கு - நேர் மாறானதாகவும் இருக்கிறது. கிறிஸ்தவன் கிருபையிலும், அறிவிலும் வளர வளர, "கர்த்தரைப் பற்றிய பயபக்தியில் பூரண பரிசுத்தமடைய" அவனால் முடியும், அத்துடன் அதே சமயத்தில் அவனு டைய அன்பையும் பூரணப்படுத்த முடியும்; பிந்தினது முடிவாக பயத்தின் ஒவ்வொரு உணர்வையும் முழுவதுமாக விழுங்கி விடுவதால், பயபக்தியானது அன்பின் ஒருங் கிணைந்த பகுதியாக மீந்திருந்தாலும், தேவனைப் பற்றிய பயபக்தியில்லாமல் யாரால் அவரிடத்தில் அன்பு கூற முடியும்?

## பூமிக்குரிய ஆசீர்வாதமும், வெகுமதியும்

இந்த பாடத்திலும் (உபா. 6 : 3) பழைய ஏற்பாட்டு வேத வாக்கியங்கள் மற்றும் அநேக பகுதிகளிலும், ஜனங்கள் தேவனுக்கும், அவருடைய நியாயப்பிரமாணத் துக்கும் கீழ்ப்படிந்து உத்தமமாய் நடப்பதற்கு ஏற்றபடி ஓர்

வெகுமதியாக பூமிக்குரிய ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வார்கள் என்பதை தேவன் அவர்களுக்கு முன்பாக முக்கியப்படுத்தி வைத்திருக்கிறார் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. சிலருக்கு இது ஒரு இடறுதலின் கல்லாக இருந்து வருகிறது; யூத யுகத்திலிருந்து சுவிசேஷ யுகத்திற்கு யுகமாற்றமடைகிற உண்மையைப் புரிந்து கொள்ளாமல், அவர்கள் இந்த வாக்குத்தத்தத்தை ஆவிக்குரிய இஸ்ரவேலருக்கும் ஒரே மாதிரியாக சமமாக பிரயோகப்படுத்துகிறார்கள், அவர்களுடைய தப்பறை யானது மனதில் குழப்பத்தை விளைவித்திருக்கிறது; ஏனெனில், தற்போதய யுகத்தில் பூமிக்குரிய ஆசீர்வாத மானது ஆவிக்குரிய இஸ்ரவேலருக்குரியதல்ல என்பது எவர் ஒருவராலும் தெளிவாக காணக்கூடியதாயிருக்கிறது. மாறாக, அப்போஸ்தலன் அதை விவரிக்கிறபடி, ஆம், **கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக் கிறவர்கள் யாவரும் துன்பப்படுவார்கள்**" (2 தீமோ. 3 : 12) என்பதாகும். "**சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்துப் போதிக்கிறவனாயும்**" இருக்கும்படி அப்போஸ்தலன் தீமோத் தேயுவுக்கு ஆலோசனையாகச் சொல்கிறதை நாம் கற்றுக் கொள்வது எவ்வளவு முக்கியமானதாக இருக்கிறது. இந்த விதியை அனுசரிக்கிறபோது சகலமும் தெளிவாயிருக்கிறது. மாம்ச இஸ்ரவேலர் பூமிக்குரிய வாக்குத்தத்தங்களைக் கொண்டிருந்தனர், பரத்துக்குரியவைகளையல்ல, அதே சமயம் ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கே பரத்துக்குரிய வாக்குத்தத்தங்கள் கொடுக்கப்பட்டிருந்தன. அவர் களுடைய பூமிக்குரிய விருப்பங்களைப் பொறுத்தமட்டில் வெறும் அப்பத்திற்கும், தண்ணீருக்கும் மட்டுமே நிச்சயத்தைப் பெற்றிருந்தனர், அவர்களுடைய இம்மைக் குரிய வளத்தைப் பொறுத்தவரையில் இவைகளுக்கு அப்பால் எந்த நிச்சயமும் இல்லை.



**ஜனங்கள் தேவனுக்கும், அவருடைய நியாயப்பிரமாணத்துக்கும் கீழ்ப்படிந்து உத்தமமாய் நடப்பதற்கு ஏற்றபடி ஓர் வெகுமதியாக பூமிக்குரிய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வார்கள்.**
**உபா. 6 : 3**




**"அந்த சமயத்திலே இயேசு சொன்னது: பிதாவே! வானத் துக்கும் பூமிக்கும் ஆண்டவரே! இவைகளை ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தின படியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்" – மத். 11 : 25.**

ஆகையால், இதுவரை, பூமிக்குரிய வெகுமதிகள் பற்றிய இந்த போதனைகளைப் பொறுத்தவரை, உபாகமம் புஸ்தகத்திற்கும், அதன் ஏவுதலுக்கும் எதிராக பிரதிபலிப் பதற்கு பதிலாக, இது அவைகளுக்கு ஆதரவாக இருக்கிறது. மாம்ச இஸ்ரயேலுக்கான வாக்குத்தத்தம், அதாவது அவர்கள் கூடை, பண்டக சாலை, மந்தை, கன்றுகள், நீண்ட ஆயுசு மற்றும் அநேக பிள்ளைகளாலும் ஆசீர் வதிக்கப்படுவார்கள் என்பது ஆவிக்குரிய இஸ்ரவேலருக்கு மேலான காரியத்தில் அதன் மறுபடிவத்தைக் கொண் டிருக்கிறது. பரலோக பிதாவானவர் மாம்ச இஸ்ரவே லருக்கு பூமிக்குரிய ஆசீர்வாதங்களைக் கொடுப்பதில் விருப்பங்கொண்டார், ஏனெனில் அவர்கள் பூமிக்குரிய வித்தைச் சேர்ந்தவர்கள். மேலும் அவர்களுடைய நேமகத்துக்குரிய நடவடிக்கைகள் ஆயிரவருட யுகத்தில் ஒவ்வொரு நற்கிரியைக்கும் வெகுமதியளித்து ஒவ்வொரு தவறான நடத்தைக்கும் தண்டனை கொடுக்கும் விதத்தில் உலகத்தாருடனான தெய்வீக நடவடிக்கைகளை நிழலாட்ட மாய் தெரிவிக்கிறது. தேவனுடைய ஜனங்களுக்கு, பெந்தே கோஸ்தே நாளில் பரிசுத்தாவியால் ஜெநிப்பிக்கப்பட்டவர் களுக்கு, அப்பொழுதிலிருந்து, "**மகா மேன்மையும் அருமை யுமான வாக்குத்தத்தங்களும்**" – பரலோக மகிமை, கனம் மற்றும் சாவாமை யாவும் ஆவிக்குரிய புது சிருஷ்டியின் அங்கத்தினர்களுக்கு உரியவைகளாயின. பூமிக்குரிய பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு பூமிக்குரிய நன்மை களைக் கொடுக்கிறதைவிட நம்முடைய பிதாவானவர், தம்மிடம் வேண்டிக் கொள்கிறவர்களுக்கு பரிசுத்தாவியைக் கொடுக்க அதிக விருப்பமுள்ளவராயிருக்கிறார். ஆவிக் குரிய இஸ்ரவேலும் விசுவாசத்தின் மூலம் ஆவிக்குரிய காரியங்களைப் பற்றிக் கொள்ளவும், பாராட்டவும் அனுப விக்கவும் நாட வேண்டியதாக இருந்ததுடன், முடிவு வரை உண்மையுள்ளதாக இருக்குமானால், இவற்றை, புது சிருஷ்டிகளாக முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு கொள்வதன் மூலமாக முழு நித்திய காலமும் மெய்யாகவே அனுபவிப்பார்கள்.

எல்லா சத்தியங்களிலும் மிகவும் முக்கியமான தொடக்க வாக்கியமாக, மாபெரும் தீர்க்கதரிசியான மோசே, ஜனங்களிடம் "**இஸ்ரவேலரே செவி கொடுங்கள்!**" என்று வேண்டிக் கேட்டுக் கொண்டார்.

# “நம்முடைய தேவனாகிய யேகோவா ஒருவரே – யேகோவா”

இந்த வாக்கியம் சொல்லப்பட்ட சமயத்தில் இது உண்மையாயிருந்ததெனில், இப்போதும் இது உண்மை தான்; இதன் முக்கியத்துவமானது இதனைக் கட்டளைகளின் பட்டியலில் மிகவும் மேல் பாகத்தில் இதனை வைக்குமானால், கர்த்தருடைய வார்த்தை பற்றிய அடிப்படை கோட்பாடுகள் சம்பந்தப்பட்ட உபதேசங்களிடையே இது இன்னமும் மிக முக்கியமானதாகக் கருதப்பட வேண்டும். ஆயினும் நாம் காண்பது என்ன? மாம்ச இஸ்ரயேலர்கள் விஷயத்தில், மோசேயின் வார்த்தைகளை அவர்கள் சீக்கிரமே மறந்துவிட்டதாக நாம் காண்கிறோம், அத்துடன் மீண்டும் அவர்கள் விக்கிரக ஆராதனை செய்ததால் – ஒரே தேவன் உண்டு, அவர் நாமம் யேகோவா என்று அறிவிக்கப்பட்டிருந்ததை மறந்துவிட்டவர்களாக பிற தெய்வங்களை தொழுது கொண்டதால் அவர்கள் தண்டிக்கப்பட்டார்கள். அதைப் போலவே, கிறிஸ்தவ ஜனங்கள் மத்தியில், இந்த மிகப் பெரிய முக்கியமான சத்தியமாகிய, ஒரே தேவன் நமக்கு உண்டு, அவருடைய நாமம் யேகோவா என்பதை மறக்கக்கூடிய இயல்பு காணப்படுகிறது. நமது ரோமன் கத்தோலிக்க நண்பர்கள் அநேக தெய்வங்களை உண்டாக்குகிறார்கள்; பிதா, குமாரன், பரிசுத்தாவி, பரிசுத்த மரியாள், அப்போஸ்தலர்கள் மற்றும் பரிசுத்தவான்கள் ஆகியோர் மேன்மையான அல்லது தாழ்வான மரியாதையும், பல்வேறு அளவுகளில் பயபக்திக்கும் வணக்கத்துக்கும், ஜெபத்துக்குரியவர்களான தெய்வங்களாக கத்தோலிக்கர்களால் கருதப்படுகின்றனர். அத்துடன் புரட்டஸ்டண்டுகளும் கூட ரோமானியத்தின் அநேக கீழ்நிலை தெய்வங்களை புறக்கணிக்கிற அதே வேளையில், இப்போதும் இந்த வேத வாக்கியத்துக்கும், மற்றெல்லா வேத வாக்கியத்துக்கும் முரணாகவும், எந்த நியாயகாரணமும் இல்லாமலே தொடர்ந்து விடாப்பிடியாக நமக்கு மூன்று தெய்வங்கள் ஒன்றாக இருப்பதாக அறிவித்து வருகின்றனர்; அப்படி இருப்பினும் இந்த வாக்கியத்தையும் அவர்கள் புறக்கணித்து, அதனை தலைகீழாக்கி, மூன்று நபர்களில் ஒரே தேவன் இருப்பதாகக் கூறுகின்றனர்! நாம் அவர்களைக் கேள்வி கேட்க முயற்சித்து, இந்த விஷயத்தில் அவர்களுடைய எதிர்பார்ப்புகள் மற்றும் நம்பிக்கைகள் பற்றிய காரணத்தைக் கேட்டால் அதற்கு பதிலாக அவர்கள் இது ஒரு பரம இரகசியம் என்கின்றனர். அதாவது எப்படி மூன்று தெய்வங்கள் ஒருவரில் இருக்க முடியும் அல்லது ஒரு தெய்வம் மூன்று ஆட்களில் இருக்க முடியும் என்பது அவர்களாலோ அல்லது வேறொருவராலுமோ புரிந்து கொள்ள முடியாது என்று சொல்வதைத் தவிர மற்றபடி மவுனமாயிருக்கிறார்கள். இது உண்மையாகவே ஒரு இரகசியமாக இருந்திருக்கக்கூடுமானால், எந்த நியாயமான மனதும் இதனை பற்றிக் கொள்ள முடியாது; ஆனால் தேவனுடைய வசனமாகிய தெளிவான, எளிதான வாக்கியத்திலிருந்து நாம் ஏன் ஒரு அறிவுக்கெட்டாத இரகசியத்தை உருவாக்க வேண்டும்? ஒரே தேவன் நமக்குண்டு, அவருக்கு மூன்று நாமங்களல்ல, ஆனால் ஒரே நாமம் யேகோவா என்ற தேவ ஆவியால் ஏவப்பட்ட மோசேயின் வாக்கியத்தை நாம் ஏன் ஏற்றுக் கொள்ளக்கூடாது?

நம்முடைய கர்த்தராகிய இயேசுவை வல்லமையுள்ள ஒருவராகவும் “வல்லமையுள்ள தேவனாக” அறிந்து கொள்வதிலிருந்து ஒன்றுமே நம்மைத் தடுக்க வேண்டிய அவசியமில்லை. வேத வாக்கியங்கள் அவரைப் பற்றி விவரித்து, அவருடைய மகத்துவத்தையும், அவருடைய ஞானம், அவருடைய அன்பு, அவருடைய வல்லமை, யேகோவாவாகிய பரலோகப் பிதாவுடன் அவருடைய முழுமையான இசைவு மற்றும், எல்லா காரியங்களிலும் அவருடைய பரலோக பிதாவின் சித்தத்துக்கு அவருடைய முழுமையான கீழ்ப்படிதல் ஆகியவை பற்றியும் நமக்குத் தெளிவாகச் சொல்கின்றன. அவர் தாமே, “**நான் என் சுயமாய் ஒன்றுஞ் செய்கிறதில்லை**” என்றும், “**என் பிதா என்னை அனுப்பினார்,**” என்றும், “**எனக்குச் சித்தமானதை நான் தேடாமல், என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறேன்,**” என்றும், “**என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார்**” என்றும் (யோவா. 5 : 30, 36; 14 :28) கூறியுள்ளார். ஒவ்வொரு பாடத்தைப் பற்றியும் உள்ளது போலவே, இந்த கருத்தின் மீதும் தேவாவியால் அருளப்பட்ட வார்த்தையை எடுத்துக் கொள்வதும், நம்முடைய சொந்த அல்லது பிற மனுஷருடைய கடுமையான வேதாந்தங்களை, அவற்றை ஏற்றுக் கொள்ளும்போது குழப்பத்தையும், புதிரையும் உருவாக்கி, கர்த்தருடைய வார்த்தையின் ஆலோசனைகளை இருளாக்குபவைகளை சார்ந்திராமலிருப்பதும் ஒவ்வொரு விஷயத்திலும் தேவாவியால் அருளப்பட்ட வார்த்தையை ஏற்றுக் கொள்வதும் மெய்யான ஞானம் மற்றும் விசுவாசத்தின் பங்காயிருக்கவில்லையா? “***சகலமும் பிதாவாலேயும், சகலமும் குமாரன் மூலமாயும் உண்டாயிருக்கிறது***” என்ற அப்போஸ்தலனுடைய மொழியாக வேத வாக்கியங்களில் எடுத்துக் கூறப்பட்டுள்ள கருத்து எவ்வளவு அழகானதாயிருக்கிறது. (1 கொரி. 8 : 6). “***தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமானவர்***” அத்துடன் “***அவராலேயே சகலமும் உண்டானது,***” அவரே சகல பெரிய கிரியைகளிலும் நேரடி காரணராகவும் பிரதிநிதியாகவும் மனுஷரைப் பொறுத்த மட்டில் மட்டுமல்லாது, தேவ தூதர்கள் பொறுத்த மட்டிலும்கூட குமாரனே அப்படியாக இருந்திருக்கிறார் என்ற எண்ணம் எவ்வளவு அழகானதாயிருக்கிறது. பிதா மற்றும் குமாரன் இடையேயான ஐக்கியம் பற்றிய வேதாகம உபதேசம் இருவரையும் கனப்படுத்துகிறது, வேத வாக்கியத்திற்கோ அல்லது நியாயத்திற்கோ எவ்வித தீங்கும் இழைக்கவில்லை, ஆனால் சாந்த குணத்தோடு கற்றுக் கொள்ளக்கூடியவர்களை சந்தோஷமான மனநிலையில்

இருக்கச் செய்து, எல்லா பாடங்கள் குறித்தும் கர்த்தரால் போதிக்கப்பட தயாராக்குகிறது.

யேகோவா தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனாகிய நம்முடைய கர்த்தராகிய இயேசுவுக்கு அவர் மனுஷனாவதற்கு முந்தின நிலையில் அவர் தாமே உலகத்தின் மீட்பராக வேண்டும், அது அவர் மனுஷ சாயலுக்கு வர தம்மைத் தாழ்த்துவதாலும், அதன் பின்பு அவர் மென்மேலும் தம்மைத்தாமே மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரண பரியந்தம் தாழ்த்தியதாலும் நிறைவேற்றப்பட வேண்டும் என்கிற சிந்தனை எவ்வளவு அழகானதாயிருக்கிறது; அதனிமித்தம், இந்த தாழ்த்தப் படுதலின் விளைவாகவும், பிதாவுக்கு உத்தம குணத்தைக் காட்டுகிற சான்றின் விளைவாகவும், அவர் மரித்தோரி லிருந்து எழுப்பப்பட்டு, தம்முடைய ஆதி மகிமையின் வாசஸ்தலத்திற்கும் அப்பால் உள்ள நிலைக்கும், பழைய சுபாவத்துக்கும் மேலான நிலைக்கும் போகும்படியாக, தெய்வீக சுபாவத்தில் பங்குள்ளவராகவும், அந்த தன்மையின் எல்லா மகிமைகளிலும் பங்கடையவும் உயர்த்தப்பட வேண்டும். அருமை மீட்பர் தம்முடைய அன்பையும், உண்மைத்துவத்தையும் வெளிப்படுத்தியதும், இப்போது அவர் உயர்த்தப்பட்டு உன்னதங்களில் சர்வ வல்லவரின் வலது பாரிசத்தில் வீற்றிருந்து, பிதாவின் நாமத்தில் அவர் உலகத்தின் ஆளுகையை தமக்கு உரியதாக்கி தாமே ஆளுகை செய்யவும், சத்திய வெளிச் சத்தாலும், அறிவாலும் ஆசீர்வதிக்கவும், விருப்பமுள்ளவர் களையும், கீழ்ப்படிகிறவர்களையும் பாவம் மற்றும் மரணம் என்ற சேற்றிலிருந்தும், ஆதாமில் இழந்து விட்டதும், கல்வாரியில் மீட்டுக் கொள்ளப்பட்டதுமான நிலைக்கென்று தூக்கி எடுக்கவும் ஏற்ற சமயத்திற்காக காத்துக்கொண்டி ருக்கிறார். கர்த்தருடைய வார்த்தைக்கு மெய்யாகவே செவி கொடுக்கிறவர்கள் எல்லோரும் அதன் மூலமாக ஞான வான்களும், மகிழ்ச்சியடைபவர்களுமாய் ஆக்கப்படுகி றார்கள். "**யேகோவாவின் இரகசியம் அவருக்குப் பயந்தவர் களிடத்தில் இருக்கிறது. அவர்களுக்குத் தம்முடைய உடன்படிக் கையைத் தெரியப்படுத்துவார்.**"

## "தம்முடைய உடன்படிக்கையைத் தெரியப்படுத்துவார்"

அந்த அற்புதமான உடன்படிக்கை, நேர்மை யிலும், விசுவாசத்திலும் வசனத்தை நாடித் தேடுகிற எல்லோருக்கும் காட்டப்பட்டதுடன், நம்முடைய அருமை மீட்பர் நம்முடைய மற்றும் உலகத்தாருடைய மீட்பிற்காக தம்மைத் தாமே தாழ்த்தியதால், மகா மேலான இடத்திற்கு உயர்த்தப்பட்டார். அதைப் போலவே, உண்மையுமுள்ளவர் களாயிருப்போமானால், நாம் அவருடன் இப்போதே பாடுபடலாம், அத்துடன் கொஞ்சம் கொஞ்சமாக, பூமியின் மீது சகல ஜாதிகளையும் ஆசீர்வதிக்கும் அந்த ராஜ்யத்தில் அவருடன் பங்கு பெறலாம். ஓ, எப்படிப்பட்ட கிருபையின் ஐசுவரியங்கள்! எப்பேற்பட்ட கனிவான அன்பு! எப்பேற்பட்ட கனிவான இரக்கம்! தெய்வீக ஞானம், திறன், நீதி, அன்பு மற்றும் வல்லமைக்கு எப்படிப்பட்ட ஆதாரங்கள்! பிதாவின் ஒரே பேறானவரைப் பற்றிய இந்த நோக்கு நிலை எவ்வாறு அவரை நம்முடைய மீட்பராகவும், நம்முடைய கர்த்தரும், தலையுமானவராக நமக்கு காட்டுகிறது, அவர் தாமே தம்முடைய வாக்குத்தத்தத்தின்படியே கொஞ்சம் கொஞ்ச மாக, சபையைத் தம்முடைய மணவாட்டியாக, தமது அன்பில் பிதாவுக்கு முன்பாக கறை திரையற்றவர் களாகவும் நிறுத்துவார். இந்த நோக்கிலிருந்து பார்க்கும் போது இயேசுவை நம்முடைய அருமை மீட்பர் என்றும் தேவனால் அனுப்பப்பட்டவர் என்றும் உலக இரட்சகர் என்றும் எற்றுக் கொள்வது, "**நம்முடைய தேவனாகிய யேகோவா ஒருவரே**" என்னும் நம் பாடத்தின் தலைப்பு வாக்கியத்தின் கட்டளைக்கு இழுக்கானதாக இல்லை; ஏனெனில் அப்போஸ்தலன் நமக்கு உறுதியளிக்கிறபடி, தெய்வீக அங்கீகாரத்திற்கேற்ப, பிதாவானவரை பயபக்தி யுடன் தொழுது கொள்வதைப் போலவே குமாரனையும் எல்லோரும் பயபக்தியுடன் தொழுதுகொள்ள வேண்டும் – அவரைப் பிதாவாக எண்ணியோ அல்லது பிதாவுக்கு மேலானவராக எண்ணியோ பயபக்தியுடனிருக்க வேண் டியதில்லை, ஆனால் எல்லாவற்றுக்கும் சுதந்திரவாளியாக பிதாவானவர் நியமித்திருக்கிற குமாரனாகவும், பிதாவுடன் இசைந்திருப்பவராக, பூமியின் சகல ஜாதிகளையும் ஆசீர்வதிக்கிறவராகவும், ஆயிரம் வருடங்களுக்குப் பிறகு பிதாவாகிய அவரே சகலத்திலும் சகலமுமாயிருப்பதற்காக பிதாவாகிய தேவனிடம் ராஜ்யத்தை ஒப்புக் கொடுப்பார் என்பதைப் புரிந்து கொண்டவர்களாய் பயபக்தியுடன் இருக்க வேண்டும். (1 கொரி. 15 : 25-28).

## முதன்மையான அல்லது பிரதான கற்பனை

யேகோவா என்னும் ஒரே மெய்யான தேவனிடம் நம்முடைய கவனத்தைத் திருப்பிய பிறகு, "**உன் தேவனாகிய யேகோவாவை உன் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமா வோடும், முழு சிந்தையோடும் அன்பு கூருவாயாக**" என்று நாம் அறிவுறுத்தப்படுகிறோம். இது நம்முடைய கர்த்தரால் அங்கீகரிக்கப்பட்ட முதலாவது பிரதானமான கற்பனை யின் தொகுப்பாக இருக்கிறது. (மத். 22 : 37). இது நாம் நம்முடைய கர்த்தராகிய இயேசுவை நேசிக்கிறோம் என்ற கருத்துடன் முரண்பட்டிருக்கவில்லை, ஏனெனில் அப்போஸ்தலன் "**பிறப்பித்தவரிடத்தில் அன்பு கூறுகிற எவனும் அவரால் பிறப்பிக்கப்பட்டவனிடத்திலும் அன்பு கூருகிறான்**" (1 யோவா. 5 : 1) என்று அறிவிக்கிறார். பிதாவை நேசிக் கிறவன் குமாரனிலும் அன்பு கூர வேண்டும், அவர் பிதாவின் தற்சொரூபமும் நமக்கு தம்முடைய சொந்த மாம்சத்தில் பிதாவின் மகிமையான குணாதிசயத்தை வெளிப்படுத்தியவருமாயிருக்கிறார். குமாரன் பிதாவை நேசித்தது போலவும் பிதாவை நோக்கி ஜெபித்தது போலவும், பிதாவுக்கடுத்த வேலையில் தாம் இருக்க




மத்தேயு 22 : 37

வேண்டும் என்று உணர்ந்தது போலவும் – எந்த வேலைக்காக பிதாவானவர் அவரை அனுப்பினாரோ அந்த வேலையை அதாவது பிதாவின் சித்தத்தை செய்து முடிப்பதற்காக இறுதியில் மரணமடைந்ததைப் போலவும், நாமும் இருக்க வேண்டும். நாம் பிதாவுக்காகவும், இங்கே குறிப்பாக சொல்லப்பட்டுள்ளபடி, அவருடைய சித்தத்துக் காகவும் அப்படிப்பட்ட பயபக்தியைக் கொண்டிருக்க வேண்டும். இஸ்ரவேல் தேசம் கர்த்தரை அதன் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும் முழு பலத்தோடும் நேசிக்கவில்லை. அதைப் போலவே சபையாகிய ஆவிக்குரிய இஸ்ரவேலும் கர்த்தரை முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு மன தோடும், முழு பெலத்தோடும் அன்புகூர அழைக்கப் பட்டிருக்கிறது. கர்த்தருடையவர்கள் எவர்களோ, அவரைப் பிரியப்படுத்த நாடுகிறவர்கள் எவர்களோ, அவர்களே அவரைச் சேவிக்கவும், தெய்வீக நோக்கங்களை முன்னோக்கி நடத்துவதில் இவ்வாறாகச் செய்ய அழைக்கப்படுகிறார்கள்.

"**இன்று நான் உனக்கு விதிக்கிற இந்த வார்த்தைகள் உன்னுடைய இருதயத்தில் இருக்கக்கடவது.**" அதைத் தொடர்ந்து கர்த்தர் சுட்டிக்காட்டியபடி, நாம் அவருடைய ஜனங்களாக ஜீவிக்கவேண்டும் என்ற முடிவை வெளிப் படையாக உறுதிமொழி எடுத்து அறிவிக்க வேண்டும் என்பது மட்டும் போதாது, ஏனெனில், "**கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்.**" ஆவிக்குரிய இஸ்ரவேலுக்கு எதிராக தீர்க்கதரிசி மூலமாக கர்த்தர் சொன்ன குற்றச்சாட்டு முற்காலத்தின் இஸ்ரவேலுக்கு எதிரானது போலவே இருக்கிறது. – "**இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம் பண்ணுகிறார்கள்: அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது.**" – எல்லோரும் அல்ல, ஆனால் அதிக பெரும்பன்மையானவர்கள் என்பது வெளிப்படை யாக இருக்கிறது. (ஏசா. 29 : 13; மத். 15 : 8). இந்த பிரதானமான அன்பின் கட்டளையானது நம்முடைய இருதயங்களில் இருக்க வேண்டும் என்பதே ஆவிக்குரிய இஸ்ரயேலர்களாகிய நமக்குரிய பாடமாக, அப்போஸ் தலனுடைய வார்த்தைகளில் அடங்கியிருக்கிறது. அப்படி யிருக்குமானால், தேவனைப் பற்றிய இவ்வன்பு எல்லாவற் றையும் ஊடுருவிச் செல்லும்; நாம் பாவத்தையும், அதன் ஆசாபாசங்களையும் நேசிப்பதைக் காட்டிலும், நண்பர் கள், உறவினர்கள், வீடுகள் அல்லது நிலங்கள் அல்லது வேறெந்த பொருளையும் நேசிப்பதைக் காட்டிலும் சிறந்ததாக அவரையும், அவருடைய ஊழியத்தையும் நாம் நேசிப்போம்; மேலும் இந்த முதலாவது மிகப்பெரிய கற்பனையைத் தன் இருதயத்தில் கொண்டிருந்து, அதனுடன் இசைந்து ஜீவிக்கிற எவனும், நிச்சயமாகவே இரண்டாவது கற்பனையாகிய, "**உன்னைப் போல் பிறனை நேசி**" என்பதையும் கொண்டிருப்பான்.

## அப்படிப்பட்டதொரு அன்பின் கனிகள்

அதாவது கர்த்தரும், அவருடைய வாயாகிய மோசேயும், தேவன் மீதுள்ள பெயரளவிலான அன்பின் வெளிப்படையான அறிவிப்பை மட்டுமே மனதில் ஆழப்பதியவைக்க நாடவில்லை என்பது அடுத்துவரும் வசனத்தால் தெளிவாக சான்றளிக்கப்படுகிறது. அது இந்த தெய்வீக கற்பனைகளைக் குறித்து அறிவிப்பதாவது; "**நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக் கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசு**" என்பதாகும். எவன் ஒருவனுடைய மனமும் இருதயமும் இப்படியாக தேவனுக் கான அன்பினாலும் அவருடைய குணலட்சணத்தின் மகிமையான பண்புகளாலும் நிரப்பப்படுகிறதோ, அவனே ஒரு மெய்யான கிறிஸ்தவனாவான். பாவத்திற்கோ அல்லது அற்பமான காரியத்துக்கோ அவனுக்கு எங்கே நேரம் கிடைக்கப்போகிறது? அவனுடைய வீடு எப்படிப்பட்டதொரு மாதிரி வீடாக இருக்கப் போகிறது! அவனுடைய பிள்ளை கள் தெய்வீக பரிபாலனத்தின் ஈடுபாடுகள் மற்றும் தேவனுடைய வார்த்தையின் கிருபையுள்ள வாக்குத்தத்தங் களிலெல்லாம் எவ்வளவு நன்றாக போதிக்கப்பட்டிருப் பார்கள்! தேவனுடனான இந்த நெருங்கிய ஐக்கியத்தின் விளைவாக வார்த்தையிலும், செயலிலும் எப்பேற்பட்ட மிதமான நிதானம் ஏற்படும். அப்படிப்பட்ட ஒரு ஜீவியத்திலிருந்து வெளிச்சம் இன்னும் எவ்விதமாய் பிரகாசிக்கும்! இந்த புத்திமதிகளின் கீழான மிக உயர்ந்த பேறுகள், அப்போஸ்தலன் மிகத் தெளிவாக முன்னறி விக்கிறபடியே யூத நேமகத்தின் கீழாக அடைந்து கொள்ளப்படவில்லை. மோசேயின் பிரமாணத்தில் யூதர்கள் மிகுந்த சிறப்பைக் கண்டுகொண்டனர், ஆனால் அதுவரைக்கும் இது அவனுக்கும், அவனுடைய திறமைகளுக்கும் தூரமானதாக இருந்ததால், அவன் படிப்படியாக அதன் ஆலோசனைக்கு கொண்டுவரப்பட்ட




"மாம்சத்தின்படி நடவாமல், ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார்." (ரோம. 8 : 4).

விஷயங்களை வெறும் வெளியரங்கமான சடங்காச் சாரமான ஆசரிப்புகளை மாத்திரம் கடைபிடித்து தளர்ந்து போய்விட்டான். ஆனால் அப்போஸ்தலன், இந்த பிரமாணத்தின்கீழ் மிக உயர்ந்த இலக்குகள் சுவிசேஷ யுகத்தின்போது ஆவிக்குரிய இஸ்ரவேலர்களால் உருவாக்கப்படலாம் என்று விவரிக்கிறார். அவர், "**மாம்சத்தின்படி நடவாமல், ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார்**" (ரோம. 8 : 4) என்று அறிவிக்கிறார்.

வேறு விதமாகச் சொல்வோமானால், யூதர் களைவிட மிகச் சரியாக அந்த மகத்தான பிரமாணத்தை நாம் காத்துக்கொள்ள அதிக திறமையுள்ளவர்களாக இல்லாதபோதும் கூட, கிறிஸ்துவிலிருக்கிற நாம், அவருடைய நீதி தற்காலிகமாக நம்முடைய மீறுதல் களுக்கு ஒரு மூடுதலாக சாட்டப்பட்டிருப்பதால், அவருடைய பரிசுத்தாவியை குறிப்பிட்ட அளவுக்கு நாம் பெற்றுக் கொள்ள முடியும். மேலும் அப்படிப்பட்ட உண்மையான கிறிஸ்தவர்கள் உலகத்தில் அதிகமாக இல்லாவிட்டா லும்கூட சத்தியத்தைப் படிப்பவர்கள் என்பவர்கள், நமக்கு முன்பாக உள்ள இந்த வசனத்தின் விளக்கம் பொருந்தக் கூடிய அளவுக்கு போதுமான எண்ணிக்கையி லுள்ளவர் களைக் குறித்துக் காட்டுகிறார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். (உபா. 6 : 7). மேலும் பெரும் பாலான எண்ணிக்கையிலானவர்கள், இயேசுவின் அடிச்சுவடு களைப் பின்பற்றுகிறவர்களுக்காக கர்த்தர் ஏற்படுத்தி வைத்திருக்கிற மெய்யான தரத்தை உணர்ந்து கொள்ள விழித்துக் கொள்ளுகிறார்கள். இவர்கள் அதிக மதிகமாக விழிப்புள்ளவர்களாயும், தங்களில் கர்த்தருடைய சித்தம் இங்கே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறபடியே நிறை வேறு வதற்காக ஜெபிக்கிறவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் தேவனுடைய கட்டளைகள், நீதியின் பிரமாணங் கள் முதலியவைகளை தங்களுடைய பிள்ளைகளுக்கு வசனத்தாலும், மாதிரியாலும் போதிக்கும்படியாக நாடித் தேடுகிறார்கள். அவர்கள் தொடர்ந்தேர்ச்சியாய் தங்க ளுடைய ஓய்வு நேரங்களிலும், வீடுகளிலும், காரில் செல்லும் போதும், மற்ற இடங்களிலும் அவற்றையே பேசுகிறார்கள். கர்த்தரைப் பற்றியும், அவருடைய அதிசயமான இரட்சிப்பின் திட்டம் பற்றிய எண்ணங்கள் அவர்களுடைய மனங்களில் காலையில் விழித்து எழும்பும்போது முதலாவதாக வருவதாகவும், அவர்கள் இரவில் வேலையிலிருந்து ஓய்வு பெற்று இளைப் பாறும்போது அவர்களுடைய நினைவுகளில் கடைசி யாகவும் இருக்கின்றன.

இந்த சத்தியத்தைப் படிக்கிறவர்களுக்கு அதிகரிக்கிற அறிவு, அவர்கள் தங்கள் இருதயங்களிலும், தங்கள் ஜீவியங்களிலும் மனம், இருதயம் ஆகியவற்றின் நிலை சிறந்த ஒன்றாக, கர்த்தருக்கு மிகவும் பிரிய மானதாக இங்கு முன்னிருத்தப்பட்டிருப்பதற்கு ஏறத்தாழ சரியாக இருக்கத் தேடுகிறார்கள் என்று விசுவாசிக்கும் படியாக நம்மை வழிநடத்துகிறது என்று சான்றளிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். கன்வென்ஷன் கூட்டங் களில் குறிப்பாக இதனைக் கவனிக்கலாம். பல்வேறு இடங்களிலிருந்து ஒரு நூறு பேர் ஒன்று சேரும்போது, கர்த்தரையோ, அவரது குணாதிசயம், அவரது திட்டம் அல்லது அவருடைய சத்தியத்துக்கு ஊழியஞ்செய்தல் ஆகியவற்றுடன் தொடர்புடையது அல்லது அவற்றைச் சார்ந்தவை நீங்கலாக அங்கே வியாபாரம் அல்லது சிற்றின்பம் அல்லது வேறெந்த விஷயம் பற்றியோ மிக அபூர்வமாகவே ஒரு வார்த்தையேனும் காதில் கேட்கப் படுகிறது என்று அநேகர் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்நியர்கள் இதனைப்பற்றி கருத்து தெரிவித்ததுடன் இதைக் குறித்து ஆச்சரியப்பட்டனர். இருந்த போதிலும், கிருபை, அறிவு மற்றும் அன்பில் வளருகிறவர்கள் மத்தியிலும், தெய்வீக தரங்களை உணர்ந்து பாராட்டு தலுக்கு நெருங்கி நெருங்கி வருகிறவர்கள் மத்தியிலும் தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்ளவும் அதையே செய்யவும் முழு வாஞ்சையால் நிரப்பப்பட்டுள்ள இருதயங்கள் கொண்டவர்கள் மத்தியிலும் நாம் வேறு எதைத்தான் எதிர்பார்க்க முடியும்.

கர்த்தருடைய ஜனங்களுக்கான சரியான தரமாகிய இதைப் போன்ற எதையுமே இன்னும் அடைந்து கொள்ளாதவர்களை நாங்கள் அதைரியப்படுத்துகிற தில்லை. மாறாக, நாங்கள் அவர்களை, நல்ல தைரியத் தோடிருந்து உலகம், மாம்சம், பிசாசுக்கு எதிரான போராட்டத்தை தொடர்ந்து மேற்கொள்ளவும், தொடர்ந்து விழித்திருக்கவும், ஜெபிக்கவும் பரலோகத்திலுள்ள நம்முடைய பிதாவுக்கு பிரியமானவர்களாக ஏற்றுக் கொள்ளதக்கவர்களாகவும் இங்கே நமக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை அடையும்படி பிரயாசப் படும்படி அவர்களைக் கேட்டுக்கொள்கிறோம். இருதயத்தில் வாஞ்சை கொண்டிருப்பது முதலாவது நிபந்தனையாகும். அத்துடன் ஜீவியத்தின் எல்லாக் காரியங்களிலும் இதனை வீரதீரத்துடன் முன்னோக்கி கொண்டு செல்வது

இரண்டாவது படியாகும். இந்த இரண்டும் உலகத்தை ஜெயங்கொள்ள அவசியப்படுவதாயுள்ளன. முதலாவது தேவன் சரியான முறையில் விருப்பங்கொள்ள நம்மில் கிரியை செய்கிறார். அதைத் தொடர்ந்து விசுவாசத்திலும், அறிவிலும், கிருபையிலும் நாம் பெலப்படுத்தப்பட்டபின்பு, சத்திய ஆவி, நம்மில் அவருடைய நல்ல விருப்பத்தைச் செய்ய கிரியை செய்து, அதன்மூலம் நம்முடைய வழிகளிலெல்லாம் அவரை நாம் மனதார ஒப்புக் கொண்டு, நம்முடைய பாதைகளை அவர் நடத்திச் செல்ல வேண்டிக் கொள்கிறோம். குடும்ப ஆராதனை, மேசை மீது பரம மன்னா தேவனுடைய திட்டத்தைப் பற்றிப் படிப்பது; ஆகிய இவைகளுக்கு நாம் பூமிக்குரிய ஆகாரத்தைப் போல முக்கியமான ஒரு இடத்தைக் கொடுப்போமானால், அவை தேவனுடைய ஆசீர்வாதம் அதிகமதிகமாக நமது வாசகர்களில் அநேகருடைய இருதயங்களிலும், ஜீவியங்களிலும் உட்பிரவேசிக்கிற வாய்க்கால்களாக இருக்கின்றன. அத்துடன் இந்த நல்ல வேலையானது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் என்றும், முன்னேற்றமடைந்து கொண்டிருக்கும் என்றும் நாங்கள் நம்புகிறோம். அவர்கள் இதை ஏற்றுக் கொள்கிறார்களோ அல்லது கொஞ்சமாவது இதை செய்வார்களேயெனில் அதற்குத் தக்க அளவில், ஒவ்வொருவனும் தன்னுடைய வீட்டில் அல்லது தனக்கு அறிமுகமானவர்கள் மத்தியில் எரிகிறதும், பிரகாசிக்கிறதுமான விளக்காகயிருப்பான். அவனுடைய சாட்சியானது தேவனுக்குப் பிரியமானதாயிருப்பதுடன் அவனுக்கும் நம்பிக்கையூட்டுவதாயும் இருக்கும். அத்துடன் கர்த்தருடைய தயவும் தாராளமாக வெளிப்படும்.

## யூதர்களின் தோல் பேழைகள்

நம்முடைய கர்த்தராகிய இயேசு தம்முடைய நாளில் யூதர்களிடையே இன்றும் காணப்படுகிறதான வழக்கமாகிய ஒன்றை அதாவது சிறு தோல் பேழையை தங்கள் நெற்றிகளிலும், தங்கள் புயங்களிலும் கட்டிக் கொள்வதையும், அதே சமயம் தேவனுடைய பிரமாணத்தைத் தங்கள் பாரம்பரியங்களினால் அவமாக்கிப் போடுவதையும் சுட்டிக்காட்டினார். உபாகமம் 6–ஆம் அதிகாரத்தின் எட்டாவது வசனம் இந்த வழக்கத்தின் அடிப்படை ஆதாரம். அது இவ்வாறு கூறுகிறது: “**அவைகளை உன் கையின்மேல் அடையாளமாகக் கட்டிக்கொள்வாயாக: அவைகள் உன் கண்களுக்கு நடுவே ஞாபகக் குறியாய் இருக்கக்கடவது.**” தோல் பேழை என்பது சிறியதொரு சதுரவடிவ தோல்பெட்டி, மூன்று அடி நீளத்தையுடைய ஒரு தோலினால் ஆன பட்டை அத்துடன் இணைக்கப்பட்டிருக்கும். சச்சதுர வடிவமுள்ள தோல் பெட்டியில் தோல் சுருள்கள் வைக்கப்பட்டு, அவற்றில் நான்கு வரிசைகளில் வேதத்தின் நான்கு வசனப் பகுதிகள் அடங்கியிருந்தன. (யாத். 13 : 1-16; உபா. 6 : 4, 11, 13-21) இவற்றை யூதர்கள் சில சமயங்களில் தலையின் மீது கட்டியிருக்கும்போது, அந்த பெட்டி கண்களுக்கு இடையே மேலே வந்து நிற்கும். அல்லது மீண்டும் அவர்கள் அப்பெட்டியை கைமுட்டியின் உட்புறமாக கட்டும்போதும், அதன் பட்டையை கையைச் சுற்றி கட்டி, அதன் முனையை கையில் பற்றிக் கொண்டிருப்பார்கள். பாவப்பட்ட யூதர்கள்! அவர்கள் வெளிப்புறத் தோற்றத்தைத் தீவிரமான ஆர்வத்துடன் பற்றிக் கொண்டனர், ஆனால் கர்த்தர் சுட்டிக்காட்டியபடி, அவர்கள் பிரமாணத்தின் மெய்யான மையக்கருத்தை, அதாவது தேவனிடமும், தங்களுடைய அயலாரிடத்திலும், கொண்டிருக்க வேண்டிய சுத்தமான இருதயத்திலிருந்து பிறக்கும் அன்பை விட்டுவிட்டார்கள். செல்வந்தர்களும், மத நம்பிக்கையற்றவர்களுமான யூதர்கள் இந்த வழக்கத்தை விட்டு விட்டார்கள். ஆனால் தினந்தோறும் ஒரு மணி நேரம் ஜெபத்தில் செலவழிப்பவர்களான மிகுந்த வாஞ்சை அல்லது பாரம்பரியமிக்கவர்கள் மத்தியில் அந்த சிறிய தோல் பேழையை அணிந்தும், எடுத்தும் வருகிற பழக்கம் இப்போதும் நடைமுறையில் இருந்து வருகிறது.

தேவனுடைய கட்டளையின் ஆவியைப் பற்றிக் கொள்வதில் மாம்ச இஸ்ரயேலரின் இந்த தோல்வியில் நமக்கு ஒரு பாடமிருக்கிறது. அவர்கள் வெளிப்புறமான பகட்டு தோற்றத்தை ஏற்படுத்தினாலும் அவர்களுடைய இருதயங்களில் சீர்கேடான நினைவுகளும், அன்பற்றதும் இரக்கமில்லாததுமான சிந்தைகளைக் கொண்டிருந்தனர் என்றும், அவர்கள் தங்கள் உதடுகளினால் வெறும் சம்பிரதாயப்படி மட்டுமே தேவனிடத்தில் நெருங்கிச் சேர்ந்தனர் என்றும், தேவனை இருதயத்தில் ஏற்றுக் கொண்டவர்களாக இல்லை என்றும் அவர்களைக் குறித்து நமது கர்த்தர் கூறினார். ஆவிக்குரிய இஸ்ரயேலர்களாகிய, நாம் அதே வெளிப்புற பகட்டான வடிவங்களை பயன்படுத்தாதபோதும், நாம் முழங்கால்களை முடக்கி அதிகமாக நீண்ட ஜெபம் பண்ணலாம்; அப்படியிருந்தாலும் நாம் கர்த்தருக்கு ஏற்புடைய நிலையிலிருந்து வெகு தூரத்தில் இன்னும் இருக்கிறோம். நாம் அவருடைய கிருபை மற்றும் சத்திய ஆவியை நம்முடைய இருதயங்களுக்குள் நுழைய அனுமதியளிப்பதும் அங்கே அவர் நமக்குச் சொல்லுகிற மாற்றத்தை உண்டு பண்ண அனுமதிக்கிறவர்கள் மட்டுமே அவருக்குப் பிரியமானவர்களும், அவரால் ஏற்றுக் கொள்ளப்படத் தக்கவர்களுமாவர். இந்த மாற்றமானது நம்மை குறைந்த அளவு சுயநலத்தோடும், அதிக அளவு தாராள மனப்பான்மையுள்ளவர்களாகவும், குறைந்த அளவு பெருமையோடும், அதிக அளவு மனத்தாழ்மையோடும், குறைந்த அளவில் இந்த உலகத்தின் பிள்ளைகளாகவும், அதிக அளவில் ராஜ்யத்தின் பிள்ளைகளாகவும், இக்காலத்திற்குரிய காரியங்களைக் குறைவான அளவில் தேடுபவர்களாகவும், தேவனுடைய ராஜ்யத்தையும் நீதியையும் அதிக அளவில் தேடுபவர்களாகவும் ஆக்கும். இவைகளையே இது

குறித்துக்காட்டுவதுடன் ஏற்ற சமயத்தில் இதனை அமல்படுத்தும்.

## நம்முடைய போக்கும், வரத்தும்

"**அவைகளை உன் வீட்டு நிலைகளிலும், உன் வாசல்களிலும் எழுதுவாயாக.**" இது சொல்லர்த்தமாக புரிந்து கொள்ளப்படவும், நடைமுறைப்படுத்தப்படவும் வேண்டும் என்று கர்த்தர் அர்த்தப்படுத்தியிருப்பாரா என்றால் அது சந்தேகத்துக்கிடமானதேயாகும்; இது அநேகமாக தோல் பேழைகளை ஜனங்களுக்கு அறிமுகப் படுத்துவதற்கு பதிலாக, கர்த்தருடைய வார்த்தையின் அர்த்தமானது, தெய்வீக பிரமாணங்களை அவர்கள் கண்டு கொண்ட எல்லாவற்றுக்கும் மேல் பரவும் நிழலாகவும் – அவர்கள் தங்கள் கரங்களால் (பெலன்) செய்த ஒவ்வொன்றையும் – பார்ப்பதற்கு பகட்டானதாகவும், வீட்டிலும், அதற்கு வெளியிலும் ஜீவியத்தின் ஒவ்வொரு காரியங்களையும் பாதிக்கிற விஷயமாகவும், கருத வேண்டும் என்பதாகும். ஆயினும், யூதர்கள், அவர் களுடைய சிறு தோல் பேழைகள் சம்பந்தமான காரியத்தின் தாற்பரியத்தை இழக்காதிருப்பார்களே யானால், அது தேவனுடைய ஆசீர்வாதத்திற்கு எந்த இடையூறும் செய்யாது என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம். அவர்கள் "மெசூஸா" என்று குறிப்பிடப்பட்ட கதவுவழியில் உள்ள பிரதானமான ஒரு இடத்தில் எழுதியவைகளை ஒன்றோடொன்று சேர்த்து தொகுத்து பொருத்தினர். எழுதுவதற்காக பக்குவம் செய்யப்பட்டுள்ள தோல் அல்லது சதுர வடிவ துண்டு காகிதத்தில் உபாகமம் 6 : 4-9; 11 : 13-21-ஆகிய வசனங்கள் எழுதப்பட்டிருக்கும். இது பின்பு சுருட்டப்பட்டு, மரம் அல்லது தகரத்தாலாகிய ஒரு சிறிய உருளையில் வைக்கப்படும். தெய்வ பக்தியுள்ள யூதர்கள் அதனைக் கடந்து செல்லும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தன்னுடைய விரலால் அதைத் தொட்டு எபிரெய பாஷையில், "கர்த்தர் உன் போக்கையும் உன் வரத்தையும் காப்பாராக" (சங். 121 : 8) என்று சொல்வது வழக்கமாயிருந்தது.

இந்த கட்டளையில் நாம் இணைத்துக் கொள்கிற மெய்யான கருத்து என்னவெனில் கர்த்தருடையவர் களாயிருக்கிற நமக்கு உரியதாயிருக்கும் ஒவ்வொன்றும் – தேவனுடைய குடும்பமாகிய, வீடாகிய, சபைக்கு உரியது; ஒவ்வொன்றும் அவருக்கு பரிசுத்தமாயிருக்கிறது, அவருடைய ஆசீர்வாதத்தின் கீழிருக்கிறது, நாம் ஒவ்வொரு விஷயத்திலும் அவரைப் பற்றி அறிக்கை செய்ய வேண்டும், "**உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக் கொள்: அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப் படுத்துவார்.**" (நீதி. 3 : 6).

அடுத்ததாக மோசே அவர்களிடம் (உபா. 6 : 10-12) கர்த்தருடைய பரிபாலனத்தில் சீக்கிரமே அவர்களுக்கு வரவிருக்கிற ஆசீர்வாதம் மற்றும் செழிப்பைக் கண்ட பிறகு, அவர்கள் தங்கள் ஆசீர்வாதத்தின் ஊற்றிலிருந்து தங்களுடைய இருதயங்களைத் திருப்பக் கூடாது என்று எச்சரித்து, புத்திமதி கூறுகிறார். மேலும் ஆவிக்குரிய இஸ்ரவேலர்கள் என்ற முறையில் – விசேஷமாக கர்த்தருடைய கையில் ஆவிக்குரிய புரிந்து கொள்ளு தலைப் பெற்று இக்காலகட்டத்தில் அதிக அளவில் இளைப்பாறுதலை அனுபவிக்கிறவர்கள் அவைகளை அனுபவிக்கும்போது, அவைகள் அனைத்தும் பிதாவின் மூலமாகவே வந்திருக்கிறதை ஒருபோதும் மறந்துவிடக் கூடாது. உண்மையில், பிதாவானவர் எப்போதும் போலவே இப்போதும் பிதாவாக, தம்முடைய கிருபை, சத்தியம் ஆகியவற்றைத் தமது குடும்பத்திற்குக் கொண்டு வருவதற்காக அமைப்புகள், யாத்ரீகர்கள் - (Pilgrims), புத்தகங்களை விற்பவர்கள் (கோல்போர்ட்டர்கள்), புத்தகங் கள், கைப்பிரதிகள் முதலிய வழிமுறைகளைப் பயன் படுத்துகிறார். மேலும், நம்முடைய ஆசீர்வாதத்துக்காக தேவன் விருப்பத்துடன் பயன்படுத்துகிற ஒவ்வொன்றைக் குறித்தும், நமது இருதயத்தின் சரியான மனப்பான்மை யில், அவருக்கு மெய்யாகவே நன்றியுள்ளவர்களாய் இருக்கிறவர்களானால், அவைகளை உணர்ந்து பாராட்ட வேண்டும். ஆனால் நல்ல காரியங்கள் தாமாகவோ அல்லது அவற்றை நமக்கு கொண்டு வருபவர்களோ, இந்த ஆசீர்வாதங்கள் எல்லாம் நமக்கு சம்பூரணமாகவும், தாராளமாகவும், கொடுக்கிற தேவனிடத்திலிருந்து வருவதா யிருக்கின்றன என்றும், அவர் இவற்றைத் தேடுகிறதற்காக நம்மை கடிந்து கொள்வதில்லை, ஆனால் மாறாக நமக்கு தாராளமாய் வெகுமதியளிக்கிறார் என்ற மிகப்பெரிய உண்மையிலிருந்து நம்முடைய கவனத்தை திசை திருப்பக்கூடியதாய் இருக்க கூடாது. இஸ்ரயேலர் தாங்கள் எவ்வாறு தேவன் தங்களை அடிமைத்தன வீட்டில் இருந்து வெளியே கொண்டு வந்தார் என்பதை தொடர்ந்தேர்ச்சியாக நினைவு கூரும்படியாக அறிவுறுத்தப்பட்டனரோ அதுபோல நாமும் கர்த்தர் எவ்வாறு நம்மை பாவம், தப்பறை மற்றும் மரணம் ஆகிய அடிமைத்தன வீட்டிலிருந்து நம்மை மீட்டுக் கொண்டு வந்தார் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இது நம்முடைய மீட்பரை சித்தரித்து காட்டுகிற மாபெரும் நிறைவேறுதலான மோசே மூலமாக நிறைவேற்றப்பட்டது என்பதைத் தொடர்ச்சியாக நினைவிற் கொள்ள வேண்டும்.

இந்த பாடத்தின் முடிவான வசனங்களில், கர்த்தருக் காகவும், அவருடைய நாமத்தின் மீது கொண்டுள்ள பயபக்தியினாலும் பிற தெய்வங்கள் அல்லது ஆட்சியாளர் கள் எல்லாரையும் தள்ளிவிட்டு அவருடைய தயவு களையும், ஆசீர்வாதங்களையும், புத்திர சுவிகாரத்தின் ஆவியையும் பெற்றவர்களாக வாழ்ந்த பிறகு நாம் நம்முடைய கடமைகளை மறந்து அல்லது அவரிடமிருந்து விலகி பாவத்திற்கு திரும்பக் கூடாது. அப்படி பாவத்துக்கு திரும்பினால் தேவ தயவுக்குப் பதில், தேவ தயவிலிருந்து

விலக்கப்படுதல் நிச்சயமாகும் என்று மறுபடியும் எச்சரிக்கப் பட்டு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. இந்த பாடங்கள், மாம்ச இஸ்ரவேலருக்கு மிகவும் சரியாக இருப்பதால், நமக்கு இன்னும் அதிக பொருத்தமானதும், முக்கியமானதாகவும் இருக்கின்றன என்று நாங்கள் அறிந்து உணர்கிறோம். நம்முடைய மனங்களின் அறைகளைக் கட்டிக் கொண்டு, பொறுமையுடன் பாதையின் முடிவு வரை பிரயாசப் படுவோம். அப்போது நாம் சோர்ந்து போகாதிருப் போமானால், வெகுமதியைப் பெற்றுக் கொள்வோம் என்ற விலையுயர்ந்த பாடம் ஒன்றைக் கற்றுக் கொள்வோமாக.

***




“உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக் கொள், அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்.” – நீதி. 3 : 6.

# யாக்கோபின் இக்கட்டுக் காலம்

*The Time of Jacob's Trouble*

**“ஐயோ! அந்த நாள் பெரியது: அதைப்போலொத்த நாளில்லை, அது யாக்கோபுக்கு இக்கட்டுக்காலம்: ஆனாலும் அவன் அதற்கு நீங்கலாகி இரட்சிக்கப்படுவான்.” எரே. 30 : 7.**

BS 878 P. 74-78

“யாக்கோபின் இக்கட்டு” என்னும் பதம் வேதாகமத்தில் இந்த ஒரே ஒருமுறை மட்டுமே வருகிறது; இந்த விசேஷமான உபத்திரவம், சுவிசேஷ யுகத்தின் முடிவில் மாம்ச இஸ்ரவேல் மீது வருகிறதாக இருந்தாலும் கூட இது மற்ற தொடர்புகளாலும்கூட விவரிக்கப்பட்டு குறித்துக் காட்டப்படுகிறது. எரேமியா 30 மற்றும் 31 ஆம் அதிகாரத்தில் தீர்க்கதரிசியானவர் இஸ்ரவேலரின் மீட்பு மற்றும் எதிர்காலத்தில் அவர்களுடைய மகிமையான சூழ்நிலை ஆகியவை குறித்த யேகோவாவின் செய்தியுடன் அவர்களை ஊக்கப்படுத்துகிறார். தேசங்களுக்கு எதிராக தேவனுடைய மகா கோபம் மற்றும் நியாயத்தீர்ப்பின் போது, அவர்கள் மீது சுமத்தப்பட்ட பாரத்திலிருந்து அவர் இஸ்ரவேலை விடுவிப்பார். (எரே. 30 : 4-11). இந்த நாளின் தொடக்கம் 1874-ல் தொடங்கும். அதின் துவக்கம் ஆயிர வருட யுகத்துடன் சம்பந்தமுடைய ஒரே கால நிகழ்ச்சியாக ஆதாமின் சிருஷ்டிப்பிலிருந்து 6000 வருடங்கள் முடிந்த 1872-ற்கு சற்றே அப்புறம் துவங்குகிறது. இந்த நாளின் அழிவுக்குரிய உபத்திரவம் தேசங்கள் மீது 1914-ல் உலக மகா யுத்தத்தின் முதல் பகுதியோடு தொடங்கியது. இஸ்ரவேலின் விழுந்துபோன நிலைமை நியாயப்பிரமாணத்தின் கீழ் சீர்படுத்தப்பட முடியாததாயிருந்தது, அவர்களுடைய அக்கிரமங்களி னிமித்தம் தேவன் அவர்களைத் தண்டித்தார். (சங். 107 : 17); ஆனால் அவர் அவர்களைத் தம்முடைய தயவுக்கு மீண்டும் கொண்டுவந்து, அவர்களுடைய பாவங்களினிமித்தம் அவர்கள் மேல் வரப்பண்ணின கொடூரமான காயங்களை குணமாக்குவதுடன், அவர் களைத் துன்புறுத்திய எதிராளிகளைத் தண்டிப்பார். (எரே. 30 : 12-17). அவர் இஸ்ரவேலைத் தம்முடைய ஜனமாக மீண்டும் கட்டுவார். (எரே. 30 : 18-22; ஆமோ. 9 : 11; அப். 15 : 15, 16 உடன் ஒப்பிடுக). தேவனுடைய மகா பெரிய உக்கிர கோபம் மகா உபத்திரவ காலத்தில் அவருடைய நோக்கங்கள் நிறைவேறித்தீரும் வரைக்கும், முடிவு பெறாது; ஆயிர வருட யுகத்தின் தொடக்க காலத்துடன் சுவிசேஷ யுகம் இணைந்து கவிந்து காணப்படும் முடிவான காலத்தில் அவருடைய ஜனங்கள் இதனைச் சிந்திப்பார்கள். (எரே. 30 : 23, 24).

அதே சமயத்தில், முக்கியமாக ஆயிர வருட யுகத்தின் போது, இஸ்ரவேலின் சகல கோத்திரங்களுக்கும் யேகோவா தேவனாயிருப்பார்; அவர்கள் தங்களுடைய உடன்படிக்கை சம்பந்தத்தின் பலனாக அவருடைய ஜனங்களாயிருப்பார்கள். (எரே. 31 : 1-6). ஆயிர வருட யுகத்தின் தொடக்கத்தில், அவர் இஸ்ரவேலின் மீதியான ஜனத்தை வடதேசத்திலிருந்து கூட்டிச் சேர்த்து, அவர்களை ஜன சமுதாயமெங்குமிருந்து கூடி வரப்பண்ணி, மகா கூட்டமாய் அவர்களைத் திரும்ப தங்கள் சுதந்திரத்துக்கு திரும்பும்படி வழிநடத்தி, அவர்களைத் தம்முடைய ஆசீர்வாதங்களால் சந்தோஷமும், திருப்தியும் அடையச்




மனந்திரும்பு, ஓ! இஸ்ரவேலே, யாக்கோபின் இக்கட்டு காலம் சமீபித்திருக்கிறது.



மீட்கப்பட்ட இஸ்ரவேல் மீண்டும் ஒன்று சேர்க்கப்பட்டு பழைய நிலைக்குக் கொண்டுவரப்பட்டது

செய்வார். (வச. 7-14). தேவனுடைய ராஜ்யத்தின் பூமிக்குரிய பகுதி ஸ்தாபிக்கப்பட்ட பின்பு, மரணத்தில் இழந்து போன அவர்களுக்கு அன்பானவர்களை திரும்ப மீட்டுக் கொடுப்பார். (வச. 15-17). மனந்திரும்புகிற பத்து இஸ்ரவேல் கோத்திரத்தார் மீதும் (எப்ராயீம், வச. 18-22) தவறுக்காக வருந்துகிற இரண்டு கோத்திரத்தார் மீதும் (யூதா வச. 23-26) அவர் இரக்கங்கொண்டு அவர்களுடைய துக்கத்தை சந்தோஷமாக மாற்றுவார். அவர் பன்னிரண்டு கோத்திரமாகிய இஸ்ரவேல் ஜனத்தாரையும் தங்கள் பூமிக்குரிய சுதந்திரத்துக்கு மீண்டும் கொண்டு வந்து, ஒவ்வொருவரையும் அவனவன் தன் தன் மீறுதல்களுக்கு மட்டும் பொறுப்பாளியாகும்படி செய்வார். (வச. 27-30). அவர் அவர்களுடன் ஒரு புது உடன்படிக்கையை உண்டுபண்ணுவார். அதாவது அவர் தம்முடைய பிரமாணத்தை அவர்களுடைய இருதயங்களில் எழுதி, அவர்கள் எல்லாரும் அவரை அறியும்படி செய்வார்; அவர் அவர்களுடைய பாவங்களையும் மன்னிப்பார். (வச. 31-34). இஸ்ரயேலர் எந்நாளுமே தேவனுடைய ஜனங்களாக நிலைத்திருப்பார்கள்; அத்துடன் எருசலேம் பரிசுத்த நகரமாக திரும்ப கட்டப்படும். அதன்பின் அது என்றென்றைக்கும் பிடுங்கப்படுவதுமில்லை, இடிக்கப்படுவதுமில்லை. (வச. 35-40). எரேமியா 30 மற்றும் 31 ஆம் அதிகாரங்களைப் பற்றி மேலும் விளக்கத்துக்கு பரோஷியா தூதன், என்ற பெயருடைய E.Vol 14, ஐயும், வால்யூம் 2, பக். 398-405 ஐயும் பார்க்கவும். (P.T.-331, பக்கம் 48 -ஐயும் பார்க்கவும்).

மேலே சொல்லப்பட்டவைகளிலிருந்து, யாக்கோபின் உபத்திரவ காலம் தீர்க்கதரிசனமாக சுவிசேஷ யுகத்தின் முடிவுக்கு பொருந்துகிறதை நாம் காண்கிறோம். எரே. 30-ஆம் அதிகாரத்தின் முதல் வசனம் 30, மற்றும் 31 ஆம் அதிகாரங்களின் முழு தீர்க்கதரிசனத்தின் தலைப்பை உள்ளடக்கியிருக்கிறது, 2 மற்றும் 3 ஆம் வசனங்கள் முன்னுரையாக இருந்து, பின்வரும் தீர்க்கதரிசன பாடப்பகுதியைக் கொடுக்கிறது. இந்த தீர்க்கதரிசனம் வேத வாக்கியங்களில் எழுதப்பட வேண்டியிருந்தது. (சுவிசேஷ யுகத்தின்போது) மேலும் இஸ்ரவேல் இரண்டாம் முறை திருப்பிக் கொண்டுவருதல், "**உன்னைச் சிதறடித்த எல்லா ஜாதிகளையும்**" (எரே. 30 : 11), இரண்டாவதாக ஒரு நாடுகடத்தலுக்குப்பிறகு, தேவன் அவர்களுடைய மூதாதையர்களுக்குக் கொடுத்ததும், அவர்கள் மீண்டும் பெற்றுக்கொள்வதுமான பரிசுத்த பூமிக்கு வர உற்சாகப்படுத்துவதற்கு இது படித்தறிந்து கொள்ளப்படவும், தியானிக்கப்படவும் கூடியதாயிருந்தது.

வசனம் 4-11 ஜாதிகள் மீதான தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கு நடத்தி, அது இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களின் விடுதலையை நிறைவேற்றுகிறது. தேவன் இங்கே தீர்க்கதரிசனமாக உரைப்பது என்னவெனில், இஸ்ரவேல் யாக்கோபின் உபத்திரவ காலத்திற்குள்ளாக வருகிறபடியால், அவர்கள் சமாதானம், பாதுகாவலுக்குப் பதிலாக அச்சத்தையே அனுபவிப்பார்கள்; அவர்கள் அஞ்சி நடுங்கும் வேதனை கொண்ட கொடுமையான பாடுகளின் கீழ் அச்சம் கலந்த பீதியால் மேற்கொள்ளப்படுவதால் ஒருவன் அவர்களைக் குறித்து பிள்ளை பெறும் ஸ்திரீகளின் பிரசவ வேதனை அடைபவர்களாக கற்பனை செய்யக்கூடும். எரே. 30 : 7-ல் அவர்களுடைய மிகுதியான அச்சத்தின் காரணம் அறிவிக்கப்பட்டுள்ளது. இது மகா நியாயத்தீர்ப்பின் நாளாயிருக்கிறது. (2 பேது. 3 : 7, 8). சுவிசேஷ யுகத்தின் அறுவடையுடனும், "**யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக் காலத்துடனும்**" அது அடியெடுத்து வைக்கிறது. (தானி. 12 : 1; மத். 24 : 21). "**அந்த நாள்** (இந்த நாளல்ல) **மகா பெரியது.**" இந்த வார்த்தைகள் அப்போதிருந்த எதிர்காலத்தின் வரவிருக்கும் ஓர் நேரத்தை சுட்டிக் காட்டுகிறது; அவர்கள் யோவே. 2 : 11-ல் இருப்பதைப் போன்று இருக்கிறார்கள். (யோவேல் தீர்க்கதரிசனம் எரேமியாவின் நாளுக்கு நெடுநாள் முன்பு எழுதப்பட்டதாகும்); அவை மகா உபத்திரவ காலத்தை மறைமுகமாக சுட்டிக்காட்டுபவையாயிருக்கின்றன: "**கர்த்தருடைய நாள் பெரிதும் மகா பயங்கரமுமாயிருக்கும்.**" எரேமியாவும் தீர்க்கதரிசனமாக உரைத்த, "**அதைப் போலொத்த நாளில்லை**" என்பதும் கூட யோவே. 2 : 2-ல் சொல்லப்பட்டதற்கு ஒத்திருக்கிறது. "**அப்படிப்பட்டது முன் ஒரு காலத்திலும் உண்டானதுமில்லை, இனித் தலைமுறை தலைமுறையாக வரும் வருஷங்களிலும் உண்டாவதுமில்லை.**" இந்த நாள் யாக்கோபுக்கும்கூட அதாவது இஸ்ரவேலரெல்லாருக்கும் மகா இடுக்கமான காலம். (ஏசா. 22 : 4, 5; செப். 1 : 14-18). "**அது யாக்கோபுக்கு இக்கட்டுக்காலம்: ஆனாலும் அவன் அதற்கு நீங்கலாகி இரட்சிக்கப்படுவான்.**" எரே. 30 : 7.

## யாக்கோபினுடைய இக்கட்டின் முதல் கட்டம்

1881-ல் யாக்கோபினுடைய உபத்திரவத்தின் முதல் கட்டம் துவங்கியது, அச்சமயம் யூத ஜனங்களில் கொஞ்சபேர் தவிர பல்வேறான ஜனங்கள் புறஜாதி தேசங்களில் நாடுகடத்தப்பட்டு இருந்தார்கள். யாக்கோபு மரணத்திலிருந்து அவர்கள் மேசியாவை கி.பி. 33 ஆம் ஆண்டின் வசந்தகாலத்தில் புறக்கணித்தது வரை 1845 வருடங்களாக தேவ தயவை அவர்கள் அனுபவித்து விட்டனர். அதன்பின்பு அவர்களுக்கு "இரண்டத்தனை" அல்லது மீண்டுமாக தயை இழந்த காலப்பகுதி அதுவும் 1845 வருடங்களுக்கு ஏற்பட்டது, (சக. 9 : 9, 12; மத். 21 : 4, 5; 23 : 38, 39). அப்பகுதி 1878 வசந்த



**பெஞ்சமின் டிஸ்ரேலி என்கிற யூதன், இங்கிலாந்தின் பிரதம மந்திரியாக** (Prime Minister) **1878-ல் மிகவும் செல்வாக்குடன் இருந்தார்.**

காலத்தில் முடிவடைந்தது. அதுமுதற்கொண்டு, தேவ தயவு இஸ்ரவேலுக்குத் திரும்பத் தொடங்கியது. (ஏசா. 40 : 1, 2). 1878-ல் டெலிட்ஷ் என்பவர் எபிரெயு மொழியில் புதிய ஏற்பாட்டை பொதுவாக புழக்கத்தில் விடத் தொடங்கினார். இங்கிலாந்தின் அப்போதைய பிரதம மந்திரியாக இருந்த டிஸ்ரேலி என்கிற ஒரு யூதன் தேசிய பெர்லின் காங்கிரஸின் செல்வாக்கைப் பயன்படுத்தி, பாலஸ்தீனத்தை உள்ளடக்கிய துருக்கியின் ஆசிய மாகாணங்கள் மீது இங்கிலாந்து பொதுவானதொரு பாதுகாத்தலுடன் கூடிய ஆட்சிக் கட்டுப்பாட்டை கொண்டு வர தீவிரமாக முயற்சி செய்தார்; துருக்கி அரசும் அந்த சட்டங்களை தன்னைச் சார்ந்திருந்த அயல்நாடுகளில் அயலார்கள் தொடர்பாக அமல் படுத்தியது. பின்பு இதுவே பாலஸ்தீனத்தில் யூதர்கள் வசிப்பதற்கு வந்த நிலையை சீர்படுத்தி தந்தது, அதைப் போலவே மற்ற யூதர்களுக்கும் ஒரு பகுதி வாசலைத் திறந்து அங்கே மெய்யான சொத்துரிமையைப் பெற்றுக் கொள்ளும் சிலாக்கியத்துடன் குடியுரிமையைப் பெற்று தந்தது. 1878-ல் இஸ்ரவேலுக்கு, "நியமிக்கப்பட்ட காலம்" நிறைவேறித் தீர்ந்த பிறகு (ஏசா. 40 : 1, 2; மார்ஜின் பார்க்கவும்) அது "***தன் சகல பாவங்களினிமித்தமும் இரட்டிப்பாய்***" அடைந்து தீர்ந்த பின்பு, தேவன் தம்முடைய ஜனங்களை மதசம்பந்தமான நீதியிலும், உலக பிரகாரமான காரியங்களிலும் ஆற்றித் தேற்ற காரணமாக விளங்கினார்.

ஆனால் அவர்களைத் தங்கள் சுய தேசத்துக்கு மீண்டும் கொண்டு வந்து, தேவனுடைய ராஜ்யம் பூமியில் ஸ்தாபிக்கப்படுவதற்கு தயார்படுத்த இதைவிடவும் மேலான சில காரியங்கள் அவசியப்பட்டது. (மத். 6 : 10; எண். 14 : 21; ஏசா. 2 : 2-4; 11 : 9; தானி. 2 : 35, 44; வெளி. 5 : 10). தேவன் இதனை யாக்கோபு உபத்திரவத்தின் திரும்பக் கூட்டிச் சேர்த்தல் எனும் முதலாம் கட்டத்தில் "**மீன்பிடிக்கிறவர்கள்**" மற்றும் "**வேட்டைக்காரர்கள்**" மூலமாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார். (எரே. 16 : 14-16). "மீன்பிடிக்கிறவர்கள்" என்பவர்கள் யூதர்களை அவர்களுடைய சுயதேசத்துக்கு கவர்ந்திழுக்க சீயோனிசம் முதலான கவர்ச்சிகரமான தூண்டில் இரையைப் பயன்படுத்துகிறவர்கள் ஆவர். இந்த வேலை டாக்டர். தியோடர் ஹெர்ஸிலின் முன்னோடியான லியோ பின்ஸ்கர் என்பவரால் 1882-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. உதவும் அரசியல் மேதைகள், யூத கிளர்ச்சியாளர்கள் மற்றும் அநேக கிறிஸ்தவர்களும்கூட யூதர்கள் தங்களுடைய சுயதேசத்துக்கு திரும்பிச் செல்வதற்கு அதிகமான உதவியும், அவர்களை உற்சாகப்படுத்த அதிகமான காரியங்களையும் செய்ய நாடித் தேடினார்கள். "வேட்டைக்காரர்கள்" என்பவர்கள் அழிப்பதற்காக பின்தொடர்ந்து செல்பவர்கள் ஆவர். இவர்களும்கூட பல்லாயிரக்கணக்கான யூதர்கள் தங்கள் சுயதேசத்திற்குத் திரும்புவதற்கு காரணமாயிருந்தார்கள். 1878-ல் கொடூரமான பாடுகள் ருமேனியாவிலும் கலீஷியாவிலும் முக்கியமாக ரஷ்யாவிலும் எழுந்தது, அதுவே 1881-ல் "மே மாத சட்டங்கள்" இயற்றப்பட்டு, அதன் விளைவாக ஐரோப்பாவின் பல்வேறு நாடுகளிலும் மிக கொடுமையான துன்பங்கள் தொடர்ந்தன. அநேக பகுதிகளில் இனப்படுகொலைகள் தாராளமாக நடந்தேறியதுடன் சொற்களால் வர்ணிக்க முடியாத அளவிற்கு மோசமான குற்றச் செயல்கள் யூதர்களுக்கு எதிராக செய்யப்பட்டன, முக்கியமாக உலக மகா யுத்தத்தின் இரண்டு கட்டங்களிலும் அவை செய்யப்பட்டன. "வேட்டையாடுதல்" சில நாடுகளில் இன்னும் தொடர்ந்து வருகிறது, மிகப் பெரிய அளவில் இல்லையெனினும் வெளித்தோற்றத்தின்படி குறைவான துன்புறுத்தலுடன் நடைபெற்று வருகிறது. தேவன் இந்த "யாக்கோபின் உபத்திரவ காலத்தின்" மூலமாக தம்முடைய நோக்கங்களை நிறைவேற்றி வருகிறார்.

## மீண்டும் கூட்டிச் சேர்க்கப்பட்ட இஸ்ரேலில் அனைத்து 12 கோத்திரங்களும் அடங்கும்

இஸ்ரவேல் ஜனங்களை திரும்ப கூட்டிச் சேர்க்க வாக்களித்ததில், தேவன் அந்த பத்து கோத்திரங்களை (சில சமயங்களில் இஸ்ரயேல், எப்ராயீம் முதலிய பெயர்களில் அழைக்கப்படுகின்றன), மட்டும் இரண்டு கோத்திரங்களிலிருந்து (பொதுவாக யூதா என்று அழைக்கப்படுகிறது) - வேறுபடுத்தி குறிப்பிட்டுச் சொல்லவில்லை, ஆனால் மாறாக எல்லா பன்னிரண்டு கோத்திரங்களுமே அதில் குறித்து காட்டப்படுகிறது. ஏனெனில் அந்த எல்லா பன்னிரெண்டு கோத்திரங்களுமே "**காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டார்**" என்று குறித்துக்காட்டப்பட்டனர், அவ்வீடு கி.பி. 33-ல் பாழாக்கப்பட்டது. அந்த பன்னிரெண்டு கோத்திரத்தார் எல்லோரும் ஏசா. 11 : 11, 12-ல் குறித்து காட்டப்பட்டு, அங்கே பத்து கோத்திரங்கள் இஸ்ரயேல் என்றும் இரண்டு கோத்திரங்கள் யூதா என்றும் இரண்டுமே குறிப்பிடப்படுகிறது: "**அக்காலத்திலே** (எரே. 30 : 7-ல் குறிப்பிடப்பட்டபடி - 'யாக்கோபின் உபத்திரவ காலம்' - என்கிற 'அதே நாளில்') ***கர்த்தர் தம்முடைய கரத்தை நீட்டி இரண்டாம் விசை*** (பாபிலோனிய சிறையிருப்பின் முடிவில் அவர் முதல்




யூதர்களை தங்கள் சுயதேசத்துக்குத் திரும்புவதற்கு கவர்ந்திழுப்பது 1882-ல், லியோ பின்ஸ்கொர் (இடது) மற்றும் டாக்டர். தியோடர் ஹெர்ஸில் (வலது) மூலமாக தொடங்கி, எரேமியாவின் தீர்க்கதரிசனத்தின் எரே. 16 : 14-16-ன் படி நிறைவேறியது. "மீன்பிடிக்கிறவர்கள்" என்பவர்கள் யூதர்களை அவர்களுடைய சுயதேசத்துக்கு கவர்ந்திழுக்க சீயோனிசம் முதலான கவர்ச்சிகரமான தூண்டில் இரையைப் பயன்படுத்தினர்.

தடவை செய்ததுபோல) **தம்முடைய ஜனத்தில் மீதியானவர்களை மீட்டுக்கொள்ள ..... ஜாதிகளுக்கு ஒரு கொடியை ஏற்றி, இஸ்ரவேலில் துரத்துண்டவர்களைச் சேர்த்து, யூதாவில் சிதறடிக்கப்பட்டவர்களை பூமியின் நான்கு திசைகளிலுமிருந்து கூட்டுவார்.**" (இவைகள் அனைத்தும் 1878 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து நடந்து வருகிறது. அதற்கு முன்பு இது போல ஒருக்காலும் நடை பெறவில்லை, ஏனெனில் சுவிசேஷ யுகத்தில் அவர்கள் பிரிந்து போவதற்கு முன்பு, அந்த பன்னிரெண்டு கோத்திரங்களும், பூமியின் நான்கு திசைகளிலுமாக ஒருபோதும் சிதறடிக்கப்படவில்லை.)

எசே. 36 : 22, 24-லும் கூட தேவன் இஸ்ரவேல் என்னும் நாமத்தின்கீழ் எல்லா பன்னிரெண்டு கோத்திரங்களையும் குறித்து சொல்லும் போது, அவர், "**ஆதலால் நீ இஸ்ரவேல் வம்சத்தாரை நோக்கி: இஸ்ரவேல் வம்சத்தாரே, ..... நான் உங்களைப் புறஜாதிகளிடத்திலிருந்து** (தேசங்கள்) **அழைத்து, உங்களைச் சகல தேசங்களிலுமிருந்து சேர்த்து, உங்கள் சுயதேசத்திற்கு உங்களைக் கொண்டு வருவேன்.**" இந்த திரும்ப கூட்டிச் சேர்த்தல், தேவன் அவர்களைச் சிதறடித்த புறஜாதியாரின் தேசங்களின் முழுமையான முடிவுக்கு சற்று முந்தியிருக்க வேண்டியிருந்ததுடன், (எரே. 30 : 10, 11; 46 : 27, 28), ஒவ்வொரு திசையிலிருந்தும், அவர்களைக் கொண்டு வந்து "**அவர்களை இஸ்ரவேலின் மலைகளாகிய தேசத்திலே ஒரே ஜாதியாக்குவேன், ......... அவர்களும், ..... அதிலே என்றென்றைக்கும் குடியிருப்பார்கள்:**" (எசே. 37 : 21, 22, 25).

## யாக்கோபினுடைய இக்கட்டின் இரண்டாம் கட்டம்

ஆகையால் "அந்த நாளில்" யாக்கோபின் உபத்திரவத்தின் முதலாம் கட்டத்தில் தேவன் ஐரோப்பாவின் நுகத்தை இஸ்ரயேலின் கழுத்தின் மேல் இராதபடிக்கு படிப்படியாக உடைத்தார். (எரே. 30 : 8). அத்துடன் ஐரோப்பாவுடன் அவர்களைக் கட்டிவைத்துள்ள கட்டுகளும், கட்டுப்பாடுகளும், கொஞ்சம் கொஞ்சமாக தளர்த்தப்பட்டு அறுக்கப்பட்டுவிட்டன. ஆனால் அங்கே யாக்கோபின் உபத்திரவத்தின் இரண்டாவது கட்டமும்கூட இருக்கிறது. இது அர்மகெதோன் யுத்தம் என்னும் வேதபாட புத்தகத்தில் (S. Vol 4) பக். 552 மற்றும் 554-ல் "இறுதி கொடுங்காற்று" என்பதாகவும், "இன்னும் கூட அதிக கடுமையான வேதனையின் அலை ஒன்று .......... மகா நாளின் யுத்தத்தின் இறுதியான போராட்டம்" இருக்கிறது என்றும் பக். 552-561-ல் இது விவரிக்கப்படுகிறது.

யாக்கோபின் இக்கட்டுக்காலத்தின் இரண்டாம் கட்டம் உலகத்தில் நடக்கும் அராஜக காலத்தின் முடிவில் வருகிறது. இது எசேக்கியேல் 38, 39-ல் விளக்கப்படுகிறது. மீண்டும் கூட்டிச் சேர்க்கப்பட்ட இஸ்ரவேலர்களின் அதிகமாக வளர்ந்து வருகிற சம்பத்தும், வளமையும் ஐரோப்பிய ஆசிய மற்றும் ஆப்பிரிக்க தேசங்களின் பொருளாசையைத் தூண்டுவதாய் இருந்து வருவதுடன், இது அவர்களுடைய மீதியாயிருக்கும் அராஜகத்தில் மிகுதியாக வலியுறுத்தப்படும். இவை இஸ்ரவேலின் மீது கடைசி நிலையாகிய யாக்கோபின் உபத்திரவத்தின் இரண்டாம் கட்டத்தை, இஸ்ரவேலின் சாபத்தின் பாத்திரத்தில் மீதமிருந்த கடைசி எச்சம் அல்லது வண்டல்களைக் கொண்டுவரும். கோகு, மாகோகு என்பது தேவனுடைய ஜனங்களின் விரோதிகளான தேசங்களின் தலைவர்களையும்) அவர்களைப் பின்பற்றுபவர்களையும் குறித்துக் காட்டுகிறது. கூடுதலாக வெளி. 20 : 8 ("ஜாதிகளாகிய .... கோகையும் மாகோகையும்") வெளிப்படையாக இது ஆயிர வருட யுகத்தின் முடிவில் சொற்ப காலத்தில் நடக்கும் நிகழ்வாக இருக்கப்போவதாகக் காட்டுகிறது; ஆகையால் பகுத்தறிவுக்கிணங்க இந்த ஒற்றுமையைப் பார்க்கும்போது தேவனுடைய மாம்ச இஸ்ரவேலரின் விரோதிகளே சுவிசேஷ யுகத்தின் முடிவிலும் வருகிறார்கள் என்பது மெய்யாகிறது. இந்த அராஜக கொள்ளைக்காரர்கள் எசே. 38, 39-அதிகாரங்களிலும்; சகரி. 12 : 1-9 மற்றும் 14 : 1-3-லும் விளக்கப்பட்டுள்ளபடி இஸ்ரவேலை யாக்கோபின் இக்கட்டின் இறுதி கட்டமாகிய இரண்டாவது கட்டத்தில் மிகவும் கடுமையாக துன்பப்படுத்துவார்கள்.

இஸ்ரவேலருடைய அவிசுவாசத்தின் காரணமாக ஏற்படும் இறுதியான சிட்சையும், அவர்களுடைய விரோதிகளின் அற்புதமான தோல்வியும் அவர்களுடைய கண்களை இறுதியாகத் திறக்கும்; "**அப்பொழுது அவர்கள் அவரை** (இயேசு) **உருவக்குத்தினதினிமித்தம் என்னை** (யேகோவா) **நோக்கிப்பார்ப்பார்கள்: ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறது போல அவருக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறது போல அவருக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்**" (சகரி. 12 : 10;



இந்த அராஜக கொள்ளைக்காரர்கள் இஸ்ரவேலை யாக்கோபின் இக்கட்டின் இறுதி கட்டமாகிய இரண்டாவது கட்டத்தில் மிகவும் கடுமையாக துன்பப்படுத்துவார்கள். எசே. 38, 39 அதிகாரங்கள்.

அமெரிக்க சங்கத்தின் யூத வெளியீட்டின் மொழிபெயர்ப்பு). பின்பு ஒரு தேசமாக மாற்றப்பட்ட இஸ்ரேல் மகா பெரிய இக்கட்டாகிய உபத்திரவத்தில் "மேகங்கள்" – வெளி. 1 : 7 தங்களை மீட்டுக் கொள்வதற்காக, தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டபடியே தங்களிடத்தில் வந்திருக்கும் மேசியாவை அறிந்து உணர்ந்து கொள்வார்கள். உதாரணமாக எசே. 39 : 22–29; சகரி. 12; 14 : 1–3; எரே. 30 : 7, 8 ஆகிய வசனங்களில் மேசியா பற்றிய தீர்க்கதரிசனங்கள் உரைக்கப்பட்டுள்ளது. அதன் பின்பு அவர்கள் "**தங்கள் தேவனாகிய கர்த்தரையும், நான் தங்களுக்கு எழுப்பப் போகிற தங்கள் ராஜாவாகிய தாவீதையுமே** (பிரியமானவர், அதாவது மேசியா – எசே. 34 : 23, 24; 37 : 24, 25; ஓசி. 3 : 5) **சேவிப்பார்கள்.**" (எரே. 30 : 9). "**இந்தப் பிரகாரம் இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள், மீட்கிறவர் சீயோனிலிருந்து வந்து, அவபக்தியை யாக்கோபை விட்டு விலக்குவார் என்றும்: நான் அவர்களுடைய பாவங்களை நீக்கும்போது, இதுவே நான் அவர்களுடனே செய்யும் உடன்படிக்கை என்றும் எழுதியிருக்கிறது.**" (ரோம. 11 : 26, 27). இது அவர்களுடைய நித்திய ஜீவனுக்கான சர்வலோக இரட்சிப்பு என்று அர்த்தமல்ல, ஆனால் இந்த இணைப்பு காட்டுகிறது போல, இஸ்ரவேலர்கள் எல்லாரும் தங்கள் சுவிசேஷ யுக "**ஒரு பகுதி குருட்டுத் தன்மையிலிருந்தும்,** (அல்லது கடினத்திலிருந்தும்)" அவர்களுடைய நியாயப்பிரமாணத்திற்கும் கிறிஸ்துவுக்கும் எதிரான பாவங்களுக்கான தண்டனையிலிருந்தும், அதைப் போலவே ஆதாமின் சாபத்திலிருந்தும் யூதேய (யூத மத) பாவங்களிலிருந்தும் விடுதலையாக்கப்படுவதையும் அர்த்தப்படுத்துகிறது.

பூமியின்மீது கர்த்தருடைய நீதியான அரசாட்சி (ஏசா. 26 : 9; 28 : 17) முதலாவது இஸ்ரவேலில் திரும்பி கூட்டிச் சேர்க்கப்பட்டவர்கள் மற்றும் மனமாற்றமடைந்தவர்களுமான யூதர்கள் மத்தியில் ஸ்தாபிக்கப்படும். (சகரி. 12 : 7, 8; எரே. 23 : 5, 6; 33 : 14–16; எசே. 36 : 24–38; E.Vol. 17ஆயிர வருட யுகம். பக். 333–345 பார்க்கவும்). அவர்கள் உயிர்த்தெழுந்து வரும் தங்களுடைய ஆதிப் பிதாக்களையும் மற்றும் மீதியாயிருக்கிற பாத்திரவான்களையும் சந்தோஷத்தோடு வரவேற்று அவர்களுடைய பயன்தரும் ஆளுகையின் மூலமாக மிகுதியாக ஆசீர்வதிக்கப்படுவார்கள். (ஏசா. 1 : 25–27; 25 : 9; 32 : 1). அதற்கு கொஞ்சம் பின்பு, போரிட்டு களைத்துப் போன, புறஜாதியானதேசங்கள் உபத்திரவ காலத்து சாபங்களால் இல்லாமற்போவதுடன் முறிந்துபோகும். (மத். 24 : 21, 22) அத்துடன் இஸ்ரேல் களிகூர்ந்திருக்கும் மகத்தான ஆசீர்வாதங்கள் பற்றி அறிந்து கொண்டு, தங்களுக்காகவும் அதைப் போலொத்த ஆசீர்வாதங்களை வாஞ்சிப்பார்கள். (ஏசா. 2 : 3, 4; சகரி. 8 : 20–22). ஒத்தாசை நாடி அவர்கள் செய்யும் தாழ்மையான விண்ணப்பங்களின் பலனாக ராஜ்யமானது அதன் ஒழுங்கு முறைகளுடன் ஒவ்வொரு தேசத்திலும் ஒன்றன் பின் ஒன்றாக, அது உலகளாவிய பேரரசாக மாறும் வரைக்கும் ஸ்தாபிக்கப்பட்டு வரும். (தானி. 2 : 44; 7 : 27). மாம்ச இஸ்ரயேலர்கள் (இரண்டாந்தர பூமிக்குரிய ஆபிரகாமின் வித்து) மூப்பரான மற்றும் வாலிபரான பாத்திரவான்களின் வழிகாட்டுதலின் கீழ் (ஆபிரகாமின் பூமிக்குரிய வித்தில் பிரதானமானது – யோவே. 2 : 28; 2 தீமோ. 2 : 20). ராஜ்யத்தின் ஆவிக்குரிய நிலையுடன் – சிறுமந்தை மற்றும் திரள்கூட்டத்தாருடன் (லூக். 12 : 32; சங். 45 : 14, 15; வெளி. 7) – சேர்ந்து, அவர்களுக்கு ஒத்துழைப்பு கொடுத்து புறஜாதியார் அடங்கிய உலகை மனமாற்றமடையச் செய்து அவர்களை ஆசீர்வதிக்கும் சிலாக்கியத்தைப் பெற்றுக்கொள்வார்கள். (ஆதி. 22 : 17, 18; 28 : 14; ஏசா. 19 : 24; எசே. 16 : 60, 61; சங். 107 : 22). இது இஸ்ரவேலின் புது உடன்படிக்கையின் கீழாக, எரேமியா 31–ல் விளக்கப்பட்டுள்ளபடி, "**பூமியிலுள்ள சகல ஜாதிகளின்**" ஆசீர்வாதத்துக்காக நிறைவேற்றப்படும்.

முழு உலகமும், விசேஷமாக இஸ்ரவேல் இப்பொழுது மிகவும் அருகில் சமீபித்திருக்கிறதான



இஸ்ரவேலர் தங்களுடைய மேசியா எப்படி வருவார் என்பது பற்றி தவறான எதிர்பார்ப்பு கொண்டிருந்தனர்; மிகப் பெரிய சேனையுடன் கூடிய ஒரு ராஜாவை எதிர்பார்த்தனர். அவர்கள் தவறான காரியத்தை எதிர்பார்த்து குருடாக்கப்பட்டிருந்தனர். முடிவாக இஸ்ரவேல் ஒரு தேசமாக மாற்றப்பட்டு, தங்கள் மேசியாவானவர் தங்களுடைய உபத்திரவங்களில் ("மேகங்கள்" – வெளி. 1 : 7) தங்களிடம் வந்திருப்பதாக கண்டுகொள்வார்கள்.



இஸ்ரவேலரின் கண்கள் அவர்களுடைய "குருட்டாட்டத்தின் (அல்லது கடினத் தன்மைகள்) ஒருபங்கு" சத்தியத்துக்கு திறக்கப்படும். அவர்கள் நியாயப் பிரமாணத் திற்கும் கிறிஸ்துவுக்கும் எதிராக அவர்களுடைய பாவங்களுக்கான தண்டனை யிலிருந்தும், அதைப் போலவே ஆதாமுடைய மற்றும் யூத மத பாவங் களிலிருந்தும் விடுதலையாக்கப்படுவார்கள்.

மகத்தான ஆசீர்வாதங்களில் களிகூருவார்கள். வாக்குத் தத்தமானது நிச்சயம். தேவன் தாமே வாக்களித் திருக்கிறார். மேலும், கிருபையாக அவர்தாமே தமது ஆணையினால் நமக்கு "**நிறைந்த ஆறுதலுண்டாகும் படிக்கு**" (எபி. 6 : 16-18). தம்முடைய வாக்குத்தத்தத்தை ஸ்திரப்படுத்தியிருக்கிறார். சர்வ வல்லமையுள்ள தேவனு டைய மகா நாளின் யுத்தம், உலகமனைத்தையும் புதிய நாளுக்காகவும், அதன் மகா பெரிய திரும்பக் கொடுத்தல் வேலைக்காகவும் ஆயத்தப்படுத்திவருகிறது. (அப். 3 : 19-23); யாக்கோபின் உபத்திரவ காலமும் யாக்கோபின் வித்தை, தங்களுடைய பங்குக்கு ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறது.

விழித்துக் கொள்ளும் மணி நேரம் மேகங்களும், காரிருளுமான ஒரு நேரமாக இருக்கும் என்றாலும், (யோவே. 2 : 1-3) அழிவின் வேலையானது "சொற்ப கால வேலையாயிருக்கும்" என்ற அவருடைய ஆசீர்வாதமான நிச்சயத்திற்காக தேவனுக்கு நன்றி. (மத். 24 : 22); விரைவிலேயே அதற்குப் பின்பு, நீதியின் மகிமையான சூரியன் பிரகாசிக்கத் தொடங்கும். (மல். 4 : 1, 2) பூமியானது (சுயநலத்தை அடிப்படையாகக் கொண்ட தற்காலத்திய பழைய சமூக அமைப்பு), "**ஒரு குடிலைப் போலப் பெயர்த்துப் போடப்படும், ...... அது விழுந்துபோம், இனி எழுந்திராது.**" (ஏசா. 24 : 19, 20). நீதி வாசமாயிருக்கும் புதிய எருசலேமாகிய புதிய வானமும், புதிய பூமியுமாகிய, தேவனுடைய புதிய கட்டடத்திற்கு கட்டிட பாதையை செவ்வைபண்ணும் நோக்கத்திற்காகவே இந்த மகா உபத்திரவ காலம் இருக்கிறது. (2 பேது. 3 : 13; ஏசா. 65 : 17; வெளி. 21). "**இவைகள் சம்பவிக்கிறதை நீங்கள் காணும்போது தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற் றென்று அறியுங்கள்**" (லூக். 21 : 31).

**ஆனபடியினாலே கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலங்கள் வரும்படிக்கும், முன்னே குறிக்கப்பட்ட இயேசுகிறிஸ்துவை அவர் உங்களிடத்தில் அனுப்பும்படிக்கும், உங்கள் பாவங்கள் நிவிர்த்திசெய்யப் படும்பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள். உலகத்தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்த வைகள் எல்லாம் திரும்பக் கொடுக்கப்படுங் காலங்கள் வருமளவும் பரலோகம் அவரை ஏற்றுக் கொள்ள வேண்டும். மோசே பிதாக்களை நோக்கி: உங்கள் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உங்களுக்காக உங்கள் சகோதரரிலிருந்து எழும்பப் பண்ணுவார்: அவர் உங்களுக்குச் சொல்லும் எல்லாவற்றிலும் அவருக்குச் செவிகொடுப்பீர்களாக. அந்தத் தீர்க்கதரிசியின் சொற்கேளாதவனெவனோ, அவன் ஜனத்திலிராதபடிக்கு நிர்மூலமாக்கப்படுவான் என்றான். அப். 3 : 19-23.**

## அறிவிப்பு

**2014-ஆம் ஆண்டிற்கான நமது கர்த்தருடைய ஞாபகார்த்த பஸ்கா ஏப்ரல் மாதம் 12-ம் தேதி சனிக் கிழமை மாலை 6.00 மணிக்குமேல் என்பதை அறிவிக்கிறோம்.**

Visit us at : **www.biblestandardindia.com**

*For English Magazines, Volumes & Translated Tracts, Booklets & Tamil Magazines Contact :*

Bro. V. Vincent Jeyakumar

Laymen's Home Missionary Movement

32-D, Dr.Solomon Compound, Near Railway Gate, Nazareth - 628 617

Thoothukudi District, Tamil Nadu, India.

E-mail ID : vincent.v31@gmail.com

Cell : 98949 26629

FOR PRIVATE CIRCULATION ONLY